# அல் ஜன்னத்


மாத இதழ்

**AL JANNATH TAMIL MONTHLY**

June 2021 ₹20 Shawwal - DulKahda 1442

## அஹ்லுல் கிதாபினரைப்

புரிந்து கொள்ளுங்கள்.






## நாடோடிகளுக்கு நாடு கிடைத்தது எப்படி?

# அல்ஹுதா அநாதை இல்லம்

14, ஸலஃபி நகர், ஏர்போர்ட், திருச்சி – 7.
தொலைபேசி: 0431-2340447, 9362340447, 9443154648, 9443364640

அல்ஹுதா அநாதை இல்லம், திருச்சி, விமான நிலையத்திற்கு அருகாமையிலுள்ள ஸலஃபி நகரில் 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதில் தற்போது 400 அநாதை மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு மார்க்கக் கல்வி, உலகக் கல்வி மற்றும் தேவையான எல்லா வசதிகளும் சிறப்பான முறையில் செய்து கொடுக்கப்படுகிறது. இந்த இல்லத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.15,00,000/- (பதினைந்து இலட்சத்திற்கு) மேல் செலவிடப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

**தங்கள் பகுதியில் உள்ள அநாதை மற்றும் ஆதரவற்ற மாணவ, மாணவிகளை**

**இவ்வில்லத்தில் சேர்த்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.**

## அல்ஹுதா நிறுவனங்கள்

- S.S.V துவக்கப் பள்ளி
- அல்ஹுதா மேல்நிலைப் பள்ளி
- இஸ்லாஹியா அரபிக் கல்லூரி (ஆண்கள்)
- இஸ்லாஹியா அரபிக் கல்லூரி (பெண்கள்)
- அல்ஹுதா மாணவர்கள் இல்லம்
- அல்ஹுதா மாணவிகள் இல்லம்
- அல்ஹுதா விதவைகள் இல்லம்
- அல்ஹுதா கம்ப்யூட்டர் சென்டர், நூலகம்
- அல்ஹுதா ஹிஃப்ள் (குர்ஆன் மனன) மத்ரஸா

**ஆன்லைன் அட்மிஷன் நடைபெறுகிறது**

**தங்கள் D.D.. M.O மற்றும் Cheque ஆகியவைகள் Al-Hudha Orphanage என்ற பெயரில் அனுப்பவும்**

ICICI A/C No. 613201205878 (K.K. Nagar Branch)
IFSC Code: ICIC0001563
IOB A/C No. 046702000000066 (JMC Branch)
IFSC Code : IOBA0000467
Approved by the income tax (Exemptions)
Registration No.C.No.7162E(134)/06-07/CIT-II/TRY/80G Dt.24.6.2016
தங்கள் நன்கொடைகள் வருமான வரிக்கு உட்பட்டது

33 ஆண்டுகளை கடந்து

# அல்ஜன்னத்

இஸ்லாமிய மாத இதழ்

ஜுன் 2021 / ஷவ்வால் - துல்கஃதா 1442 / மலர்:22 இதழ்: 5



ஆசிரியர்

**S.கமாலுத்தீன் மதனி**

+91 94434 53943

skmadani@gmail.com

துணை ஆசிரியர்கள்

**M.அப்துர் ரஹ்மான் மன்பஈ**

**M.பஷீர் ஃபிர்தவ்ஸி**

இதழ் வடிவமைப்பு

**மதார்ஷா ஃபிர்தவ்ஸி**



சந்தா விவரம்:

| | | |
|---|---|---|
| தனி பிரதி | : | ₹ 20/- |

ஆண்டுச் சந்தா

| | | |
|---|---|---|
| உள்நாடு | : | ₹ 240/- |
| வெளிநாடு | : | ₹ 1100/- |

சந்தா தொடர்புக்கு : 044-4214 8190, 9884768199

**AL JANNATH - INDIAN BANK**

A/C NO. 782638522

Branch No. 403, Adhithanar Salai,

Chennai - 2.

IFSC Code: IDIB000A090

விளம்பர விவரம் : முழு வண்ணப் பக்கம்

| | | |
|---|---|---|
| பின் பக்கம் (ரேப்பர்) | : | ₹ 8000/- |
| உள் பக்கம் (2வது ரேப்பர்) | : | ₹ 6000/- |
| உள் பக்கம் (3வது ரேப்பர்) | : | ₹ 5000/- |

கறுப்பு வெள்ளை

| | | |
|---|---|---|
| முழுப் பக்கம் | : | ₹ 2000/- |
| அரை பக்கம் | : | ₹ 1000/- |
| கால் பக்கம் | : | ₹ 500/- |

**விளம்பர தொடர்புக்கு : 044 - 4214 8190**

+91 9884768199

முகவரி

**61/26, அய்யாசாமி தெரு, புதுப்பேட்டை, சென்னை -2.**

**aljannath_monthly@yahoo.co.in**

**jaqhaljannath@gmail.com** **www.jaqh.org**


بسم الله الرحمن الرحيم

# الجنة

مجلة إسلامية شهرية


**நாடோடிகளுக்கு நாடு கிடைத்தது எப்படி?** 4

**அஹ்லுல் கிதாபினரைப் புரிந்து கொள்ளுங்கள்** 6

**அடிப்படைக் கொள்கை** 12

**அரபியில்தான் குத்பாவா?** 16

**நேர நிர்வாகம்** 20

**கேம் விபரீதங்கள்** 23

**லியோபால்ட் கண்ட இஸ்லாம்** 34

**கேள்வி பதில்** 39


**ஹதீஸ்கள் தொகுக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட வரலாறு - 2** 42

**இஸ்லாமிய எழுச்சி** 48

# நாடோடிகளுக்கு நாடு கிடைத்தது எப்படி?

நாடற்ற சமூகம் என்று ஒட்டுமொத்த உலக மக்களாலும் அறியப்பட்ட ஒரு சமூகம்தான் யூத சமூகம். இறைத்தூதர் மூஸா(அலை) அவர்கள் காலத்தில் வாழ்ந்த இவர்களின் முதாதையர்கள் அக்கிரமத்திலும், அநியாயத்திலும் ஈடுபட்டு, இறைத்தூதர்களையும், பொது மக்களையும் கொலை செய்து, அவர்களுடைய உடைமைகளை சூரையாடி பிழைத்து வந்த சமூகம், இறைவனால் சபிக்கப்பட்டு, நாற்பது ஆண்டுகள் நாடற்றவர்களாக சுற்றித்திரிவார்கள் என இறைத்தூதர் மூஸாவிற்கு அறிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைதான் அவர்களுக்கு நீடித்துவந்தது. இறுதி இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுடைய காலத்தில் மதீனாவில் வாழ்ந்து வந்த இந்த சமூகத்தவர்கள் அவர்களுடைய தீய செயல்களாலும் கொலைவெறி குணத்தினாலும் மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

நாலா பக்கங்களிலும் சிதறிச் சென்ற இந்த சமூகத்தவர் ஐரோப்பிய நாடுகளிலே அகதிகளாகக் குடியேறினர். இவர்களின கொடிய தீயகுணத்தின் காரணத்தினாலும், மனித பண்பற்ற செயல்களின் காரணத்தினாலும் ஜெர்மன் நாட்டின் அதிகாரத்தை தன்கையில் வைத்திருந்த ஹிட்லரால் இந்த சமூகம் கொன்று குவிக்கப்பட்டார்கள். இவர்களில் மிச்சமிருந்தவர்கள் பாலஸ்தீனத்தை குறி வைத்து அங்கே குடியேறினார்கள். எங்கள் சமூகத்தின் மூதாதையர் இங்குதான் வாழ்ந்தார்கள் என்பதை காரணம் காட்டி அங்கே கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெயர்ந்து அப்பாவி பாலஸ்தீன மக்களிடமிருந்து நிலங்களை வாங்கி குடியமர்ந்தார்கள். தங்கள் தொழில் வளங்களைப் பெருக்கினார்கள். பல பகுதிகளிலும் சிதறி வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களை வரவழைத்து தங்களுடைய கை ஓங்குபடி செய்தார்கள். இவர்களுடைய




சதித்திட்டத்திற்கு ஐரோப்பிய நாடுகள் துணைநின்றன.

பாலஸ்தீன மக்கள் இரக்கப்பட்டு அகதிகளாக வந்த யூதர்களுக்கு இடம்கொடுத்தனர். அந்த பாலஸ்தீன மக்களையே நாடற்றவர்களாக ஆக்கும் முயற்சியில் யூதர்கள் ஈடுபட்டார்கள். பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீனியர்களை கொன்று குவித்தார்கள். இந்த யூத சமூகத்தின் கொலை வெறி தாக்குதலுக்கு அஞ்சி பாலஸ்தீனியர்கள் பல நாடுகளிலும் அகதிகளாக குடியேறும் நிலை உருவானது. இன்றுவரை அவர்கள் அகதிகளாகவே இருந்து வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளின் சதித்திட்டத்தினாலும், பாலஸ்தீனர்களின் பலவீனத்தாலும் **1947**ல் பாலஸ்தீனத்தை எங்கள் நாடு என பிரகடனப்படுத்தினார்கள். அதற்கு எதிர்ப்பு குரல் கொடுத்த அந்நாட்டு பூர்வீக மக்களை கொன்று குவித்தார்கள். எழுபது ஆண்டு காலமாக யூதர்களோடுள்ள போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக பாலஸ்தீன பூமியை இஸ்ரேல் கைபற்றிக் கொண்டே இருக்கிறது. அரேபியர்களை முழுமையாக அங்கிருந்து காலிசெய்துவிட வேண்டும் என்ற வெறியில் செயல்பட்டு வருகின்றனர்.

இந்த யூதர்களைப் போன்ற ஒரு கொடிய குணம்கொண்ட சமூகத்தை உலக வரலாறு கண்டதில்லை. இறைவனுடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் உரிய சமூகமான இந்த யூத சமூகம் ஒரு நாள் அழியப்போவது உறுதி என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். சமீப நாட்களாக இஸ்ரேலிய யூதர்கள் பாலஸ்தீனத்திலுள்ள அப்பாவி மக்களை குண்டு வீசி தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உயிருக்கும் உடமைக்கும் சேதம் விளைவிக்கின்ற காட்சிகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த யூத சமூகம் செய்வது மாபெரும் அநீதி, அக்கிரமம் என அதிகமான நாடுகளும் தெரிவித்துக் கொண்டிருக்கின்ற வேளையில் அருகில் இருக்கின்ற அரேபிய நாடுகள் மௌனம் சாதிப்பது கேள்விக் குறியாக இருக்கிறது. எழுபது வருடங்களாக நடந்து வரும் இந்த தொடர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, யூதர்களை அந்த பகுதியிலிருந்து விரட்டியடிக்க இந்த நாடுகள் எந்த முயற்சியும் செய்யாத காரணத்தினால் சொற்ப அளவில் உள்ள இஸ்ரேல் யூதர்கள் எல்லா நாட்டிற்கும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர். இந்த சமூகத்தின் அநியாயத்திற்கு எதிராக அரபு நாடுகளும், முஸ்லிம் நாடுகளும் எதிர்த்து குரல் கொடுக்க தவறுவார்களானால் அதனுடைய விளைவு இவர்களையும் விட்டு வைக்காது என்பதை உணர்ந்து எல்லோரும் சேர்ந்து மனித சமூக விரோதிகளான சியோனிச யூதர்களை ஒழிக்க ஒன்று திரள்வது காலத்தின் கட்டாயமாகும்.◉



# அஹ்லுல் கிதாபினரைப் புரிந்து கொள்ளுங்கள்

**அல் ஹாபில் இன்திகாப் உமரீ**

**இலங்கை**

இன்று உலக மக்கள் தொகையில் கிறிஸ்தவ சமயத்துக்கு அடுத்தபடியாக 160 கோடி மக்களால் பின்பற்றப்படும் மார்க்கமாக தீனுல் இஸ்லாம் உள்ளது. உலகின் இரண்டாவது பெறும் மார்க்கமாக இஸ்லாம் இருந்தும் கூட இன்று பல நாடுகளில் இஸ்லாமும், முஸ்லிம்களும் குறிவைத்துத் தாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நீங்கள் அறிவீர்கள், அதிலும் குறிப்பாக வேதக்காரார்கள் இவ்விடயத்தில் திட்டமிட்டு செயல்படுவதை அன்றாட செய்திகளினூடாக நாம் அறிகிறோம். இதற்கான காரணம் தான் என்ன.?

வேதம் வழங்கப்பட்டோரைப் பற்றி அல்குர்ஆன் கூறும் செய்திகளில் இக்கேள்விக்கான பதிலை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும் :

**1)** வேதம் வழங்கப்பட்டோர் நாம் அவர்களின் மதத்தைப் பின்பற்றும் வரை அவர்கள் எம்மை பொருந்திக் கொள்ளவே மாட்டார்கள்.

அல்லாஹ் சொல்கிறான்,

(நபியே!) நீங்கள் யூத மற்றும் கிறிஸ்தவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றும் வரையில் உங்களைக் குறித்து அவர்கள் திருப்தியடையவே மாட்டார்கள். (ஆகவே அவர்களை நோக்கி) "அல்லாஹ்வின் நேர்வழி(யாகிய இஸ்லாம்) தான் நேரான வழி. (அதனையே பின்பற்றுவேன்)" எனக் கூறிவிடுங்கள். அன்றி உங்களுக்கு (மெய்யான) ஞானம் வந்த பின்னும் அவர்களுடைய விருப்பங்களை பின்பற்றினால் அல்லாஹ்விடத்தில் (அதற்காக விசாரணை செய்யப்படும் நாளில்) உங்களை காப்பவனுமில்லை; உங்களுக்கு உதவி செய்பவனுமில்லை.

(அல்குர்ஆன் : 2:120)

**2)** அவர்கள் ஏன் எம்முடன் முரண்படுகின்றார்கள்.? அவர்களின் குறிக்கோள் தான் என்ன..?

அல்லாஹ் சொல்கிறான்,

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான். வேதம் அளிக்கப்பட்டவர்கள் (இதுதான் உண்மையான வேதம்" என்ற) ஞானம் அவர்களுக்கு கிடைத்த பின்னர் தங்களுக்கிடையே உள்ள பொறாமையின் காரணமாகவே (இதற்கு) மாறுபட்டனர். ஆகவே, (இவ்வாறு) எவர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களை நிராகரிக்கின்றார்களோ அவர்களுடைய கணக்கை நிச்சயமாக அல்லாஹ் வெகு சீக்கிரத்தில் எடுப்பான்.

(அல்குர்ஆன் : 3:19)

அவர்கள் தங்களிடம் வேதம் வந்ததன் பின்னரும், தங்களுக்கு இடையிலுள்ள பொறாமையின் காரணமாகவே அன்றி (உண்மையிலிருந்து) அவர்கள் பிரிந்துவிடவில்லை.

(அல்குர்ஆன் : 42:14)

1: வேதத்தையுடையவர்களில் பெரும்பாலானவர்கள் நம்பிக்கையாளர்களாகிய உங்களை நிராகரிப்பவர்களாக மாற்றிவிட வேண்டுமே! என்று விரும்புகிறார்கள்.

2: அவர்களுக்கு உண்மை (இன்னதெனத்) தெளிவாகத் தெரிந்த பின்னும் இவ்வாறு அவர்கள் விரும்புவதன் காரணமெல்லாம் அவர்களுக்கு (உங்கள் மீது)ள்ள பொறாமைதான்.

அல்லாஹ் அதிகமான இறைத்தூதர்களை யூதர்களிலும் கிறிஸ்தவர்களிலும் இருந்தே அனுப்பினான் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களின் சமூகத்திலிருந்தே வர வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆனால் அல்லாஹ் வரம்பு மீறிய அந்த சமூகத்தாரை புறக்கணித்து குறைஷிகளிலிருந்து இறுதித்தூதரை வரவைத்தான். இதுவே அவர்களின் பொறாமைக்குரிய முதல் காரணியாக அமைந்தது இதன் விளைவாக அறிந்து கொண்டே இறுதித் தூதரையும் அவரின் சமூகத்தாரையும் புறக்கணித்து நடப்பதை கொள்கையாக கொண்டார்கள்.

உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பட்ட இவ்வேதம் அவர்களில் பெரும்பாலானவர்களுக்குப் பொறாமையையும், நிராகரிப்பையுமே நிச்சயமாக அதிகப்படுத்தி வருகிறது. ஆகவே, இந்நிராகரிப்பவர்களைப் பற்றி நீங்கள் கவலைக் கொள்ளாதீர்கள்.

(அல்குர்ஆன் : 5:68)

**அவர்களுக்கு உண்மை (இன்னதெனத்) தெளிவாகத் தெரிந்த பின்னும் இவ்வாறு அவர்கள் விரும்புவதன் காரணமெல்லாம் அவர்களுக்கு (உங்கள் மீது)ள்ள பொறாமைதான்.**

எவரும் தங்கள் குழந்தைகளை(ச் சந்தேகமற) அறிவதைப் போல, வேதம் கொடுக்கப்பட்டவர்கள் (நமது தூதராகிய) இவரை (இவர் இறைவனுடைய தூதர்தான் என்று) நன்கறிவார்கள். (எனினும், அவர்களில்) எவர்கள் (இதனை மறைத்து) தங்களுக்குத் தாமே நஷ்டமிழைத்துக் கொண்டனரோ அவர்கள்தாம் (நம் தூதராகிய இவரை இறைவனுடைய தூதரென்று) நம்பமாட்டார்கள்.

(அல்குர்ஆன் : 6:20)

இன்று உலகெங்கிலும் நிகழும் இஸ்லாத்திற்கு எதிரான நிகழ்ச்சி நிரல்களின்

இலக்கு இஸ்லாத்தை விட்டு முஸ்லிம்களைத் தூரமாக்குவது தான் என்பதை தெளிவாகவே அல்லாஹ் சொல்லி விட்டான்.

**3) நாம் செய்ய வேண்டியது என்ன.?**

*ஆகவே, அல்லாஹ்வுடைய (மற்றொரு) கட்டளை வரும் வரையில் (அவர்களை) நீங்கள் மன்னித்துப் புறக்கணித்து வாருங்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் மிகவும் ஆற்றலுடையவன்.*

*(அல்குர்ஆன் : 2:109)*

*நம்பிக்கையாளர்களே! உங்(கள் மார்க்கத்தை சேர்ந்தவர்) களையன்றி (மற்றவர்களை) உங்களுக்கு மிக நெருக்கமானவர்களாக நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள்.*

*(ஏனென்றால்) அவர்கள் உங்களுக்குத் தீங்கிழைப்பதில் ஒரு சிறிதும் குறைவு செய்வதில்லை. உங்களுக்குத் துன்பம் ஏற்படுவதை அவர்கள் விரும்புகின்றார்கள்.*

*அவர்களுடைய வாய்(ச் சொற்)களைக் கொண்டே (அவர்களுடைய) பகைமை வெளிப்பட்டுவிட்டது. (உங்களைப் பற்றி) அவர்களுடைய உள்ளங்களில் மறைந்திருப்பவைகளோ மிகக் கொடியவை.*

*நிச்சயமாக நாம் (அவர்களுடைய) அடையாளங்களை உங்களுக்கு விவரித்து விட்டோம். நீங்கள் அறிவுடையவர்களாக இருந்தால் (அறிந்து கொள்ளலாம்.)*

*(அல்குர்ஆன் : 3:118)*

*நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப் பட்டவர்களில், எவர்கள் உங்கள் மார்க்கத்தைப் பரிகாசமாகவும், (வீண்) விளையாட்டாகவும் எடுத்துக் கொண்டிருக்கின்றனரோ அவர்களையும், நிராகரிப்பவர்களையும் (உங்களுக்குத்) தோழர்களாக(வும், பாதுகாவலர்களாகவும்) எடுத்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் உண்மை நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வுக்கே பயந்து (நடந்து) கொள்ளுங்கள். (இவர்களில் எவருக்கும் அஞ்சாதீர்கள்.)*

*(அல்குர்ஆன் : 5:57)*

*(நம்பிக்கையாளர்களே!) உங்கள் பொருள்களிலும், உங்கள் ஆத்மாக்களிலும் (நஷ்டம் இழைக்கப்படுவதன் மூலம்) நிச்சயமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களாலும், இணைவைத்து வணங்குபவர்களாலும், பல வசைமொழிகளை நிச்சயமாக நீங்கள் செவியுறுவீர்கள். (இத்தகைய கஷ்டங்களை) நீங்கள் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்து அல்லாஹ்வை பயந்தவர்களாக வாழ்ந்து வந்தால் (நீங்கள் வெற்றியடைவீர்கள்.) நிச்சயமாக இதுதான் வீரச்செயலாக இருக்கும்.*

*(அல்குர்ஆன் : 3:186)*

வேதமுடையோரும் இறை நிராகரிப்பாளர்களும் அவர்களின் திட்டங்கள் நிறைவேறும் வரை முஃமின்களின் உயிர்களைப் போக்கியும். வீண் பழிகளை சுமக்கச் செய்தும், இழி சொற்களைக் கொண்டும் எம்மைத் துன்புறுத்துவார்கள். நாம் அல்லாஹ்வின் உதவி எம்மை வந்தடையும் வரை பொறுமையாக இருக்க வேண்டும்.

*(நபியே!) இவ்வக்கிரமக்காரர்களின் செயலைப் பற்றி அல்லாஹ் பராமுகமாய் இருக்கிறான் என நீங்கள் எண்ண வேண்டாம். அவர்களை (வேதனையைக் கொண்டு உடனுக்குடன் பிடிக்காது) தாமதப்படுத்தி வருவதெல்லாம், திறந்த கண்*

திறந்தவாறே இருந்து விடக்கூடிய (கொடியதொரு மறுமை) நாள் வரும் வரையில்தான்!

(அல்குர்ஆன் : 14:42)

**3) யூதர்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைவார்களா..??**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யூதர்களில் (ஒரே நேரத்தில்) பத்துப் பேர் என்னைப் பின்பற்றியிருப்பார்களாயின், பூமியின் மீதுள்ள அனைத்து யூதர்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டிருப்பார்கள்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 5383.

**யூதர்கள் வித்தியாசமான குணமுடையவர்கள். யாருக்குக் கீழும் வாழ விரும்பாதவர்கள். அனைவரையும் நாமே ஆள வேண்டும் என்ற அகங்காரம் கொண்டவர்கள். இத்தகைய பண்புகள் அவர்களை பொறாமைக்காரர்களாகவே வாழச் செய்துள்ளது. இன்று இஸ்லாத்திற்கு எதிரான இவர்களின் செயல்பாடுகளுக்குக் காரணமே பொறாமை தான்.**

வேதமுடையோரில் யூதர்கள் வித்தியாசமான குணமுடையவர்கள். யாருக்குக் கீழும் வாழ விரும்பாதவர்கள். அனைவரையும் நாமே ஆள வேண்டும் என்ற அகங்காரம் கொண்டவர்கள். இத்தகைய பண்புகள் அவர்களை பொறாமைக்காரர்களாகவே வாழச் செய்துள்ளது. இன்று இஸ்லாத்திற்கு எதிரான இவர்களின் செயல்பாடுகளுக்குக் காரணமே பொறாமை தான்.

**4) பொறாமையின் விபரீதமும் படிப்பினையும்.**

எமது தந்தை ஆதம் (அலை) அவர்கள் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப்படி வானவர்கள் அவருக்கு ஸுஜூத் செய்ய ஜின் இனத்தைச் சார்ந்த இப்லீஸ் தற்பெருமை பேசி ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்ய மறுத்து விட்டான், அன்று தொடக்கம் அல்லாஹ்வின் சாபத்தைப் பெற்றவனாக இப்லீஸும் அவனின் சந்ததியினரும் ஆகிவிட்டார்கள்.

(ஆகவே இறைவன் இப்லீஸை நோக்கி) "நான் உனக்குக் கட்டளையிட்ட சமயத்தில், நீ (சிரம்) பணியாதிருக்கும்படி உன்னைத் தடை செய்தது எது?" என்று கேட்க, (அதற்கு இப்லீஸ்) "நான் அவரைவிட மேலானவன். (ஏனென்றால்,) நீ என்னை நெருப்பால் படைத்தாய். அவரைக் களிமண்ணால் படைத்திருக்கின்றாய். (களிமண்ணை விட நெருப்பு உயர்ந்தது)" என்று (இறுமாப்புடன்) கூறினான்.

(அல்குர்ஆன் : 7:12)

"என்னை விட நீ சிறப்பித்த இவரைப் பற்றிக் கூறுவாயாக!

(அல்குர்ஆன் 17:62)

இப்லீஸ் தற்பெருமை பேசிப் பொறாமையை வெளிப்படுத்தினான். இது தான் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு மத்தியில் நிகழ்ந்த முதல் பாவம் என தப்ஸீர் ஆசிரியர்கள் விளக்கியுள்ளார்கள்.

பின்னர் அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களிலிருந்தே அவர்களுக்கான சிறந்த வாழ்க்கைத் துணையாக ஹவ்வா (அலை) அவர்களைப்படைத்து இருவரையும் சுவனத்திலே வாழச் செய்தான்.

"ஆதமே! நீங்கள் உங்களுடைய மனைவியுடன் இச்சோலையில் வசித்திருங்கள். நீங்கள் இருவரும் விரும்பிய

இடத்திலெல்லாம் (சென்று விரும்பியவற்றையெல்லாம்) புசியுங்கள். எனினும், இந்த மரத்தின் சமீபத்தில் கூட நீங்கள் செல்லாதீர்கள். (அவ்வாறு சென்றால்) அதனால் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொண்டவர்களாக ஆகிவிடுவீர்கள்" (என்று கூறினான்.)

(அல்குர்ஆன் : 7:19)

சுவனத்தில் அவர்களுக்கு அனைத்து வித சுதந்திரமும் வழங்கப்பட்டிருந்தது. ஒரே ஒரு தடை அந்த மரத்தை நெருங்கக் கூடாது என்பது தான். பொறாமை கொண்ட இப்லீஸ் அவர்களுக்குத் தவறான ஆசையை ஊட்டி அவ்விருவரையும் அல்லாஹ்வின் வரம்பை மீறச்செய்தான் .

(எனினும்) அவ்விருவருக்கும் மறைந்திருந்த அவர்களுடைய மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக (இப்லீஸாகிய) ஷைத்தான் (தவறான எண்ணத்தை) அவர்கள் மனதில் ஊசலாடச் செய்து அவர்களை நோக்கி "(அதன் கனியைப் புசித்தால்) நீங்கள் இருவரும் மலக்குகளாகவோ, அல்லது மரணமற்றவர்களாகவோ ஆகிவிடுவீர்கள் என்பதற்காகவேயன்றி (வேறெதற்காகவும்) உங்கள் இறைவன் இம்மரத்தை உங்களுக்குத் தடுக்கவில்லை" என்று கூறியதுடன்,

(அல்குர்ஆன் : 7:20)

"நிச்சயமாக நான் உங்களுக்கு நன்மையையே கருதுகிறேன்" என்று அவ்விருவரிடமும் சத்தியமும் செய்து,

(அல்குர்ஆன் : 7:21)

அவர்களை மயக்கி, (அம்மரத்தின் கனியைப் புசிப்பதற்காக) அதன் பக்கம் அவர்களைச் சென்றடைய வைத்தான். அவ்விருவரும் அம்மரத்(தின் பழத்)தைச் சுவைக்கவே, அவ்விருவரின் மர்ம உறுப்புகளும் அவர்களுக்குத் தெரிந்து, அச்சோலையின் இலையைக் கொண்டு தங்களை மூடிக்கொள்ள அவர்கள் முயற்சித்தனர். அது சமயம் இறைவன் "அம்மரத்தை விட்டும் நான் உங்களைத் தடுத்திருக்கவில்லையா? நிச்சயமாக ஷைத்தான் உங்களிருவருக்கும் பகிரங்கமான எதிரி என்றும் நான் உங்களுக்குக் கூறவில்லையா?" என்று அவ்விருவரையும் அழைத்துக் கூறினான்.

(அல்குர்ஆன் : 7:22)

(அதற்கு அவர்கள்) "எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்" என்று (பிரார்த்தித்துக்) கூறினர்.

(அல்குர்ஆன் : 7:23)

(அதற்கு இறைவன் "இதிலிருந்து) நீங்கள் வெளியேறி விடுங்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்கு எதிரியாகி விடுவீர்கள். பூமியில்தான் உங்களுக்குத் தங்குமிடம் உண்டு. (அதில்) ஒரு காலம் வரை சுகம் அனுபவிக்கலாம்" என்று கூறினான்.

(அல்குர்ஆன் : 7:24)

(அன்றி) "அதிலேயே நீங்கள் உயிர் வாழ்வீர்கள்; அதிலேயே நீங்கள் இறப்பீர்கள்; (பின்னர் ஒரு நாளில்) அதிலிருந்தே எழுப்பவும் படுவீர்கள்" என்றும் கூறினான்.

(அல்குர்ஆன் : 7:25)

வேதமுடையோர் யார்..? அவர்களின் பண்புகள் என்ன.? நாம் எவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும்.? அவர்கள் ஏன் எம்மை எதிர்க்கின்றார்கள் என்ற பல விடயங்களை அவர்களின் உள்ளத்தை அறிந்த ரஹ்மான் எமக்குத் தெளிவாகச் சொல்லி விட்டான். குறிப்பாக இப்லீஸ் எம்மீது கோபமடைய எப்பண்பு

காரணமாக இருந்ததோ அதே பொறாமை வேதக்காரர்களிடம் இருப்பதாக அல்லாஹ் சொல்லி விட்டான். எனவே இவர்களின் சதிவலைகளில் சிக்கி நாளை மறுமை வாழ்வை பறிகொடுத்துவிடாதிருக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

அல்லாஹ் சொல்கிறான்,

ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் தாய் தந்தையை (அவர்கள் இன்பமுடன் வசித்து வந்த) சோலையிலிருந்து வெளியேற்றி (துன்பத்திற்குள்ளாக்கி)யது போல உங்களையும் துன்பத்திற்குள்ளாக்கி விட வேண்டாம்.

அவர்களுடைய மானத்தை அவர்களுக்குக் காண்பிப்பதற்காக அவன் அவர்களுடைய ஆடையைக் களைந்து விட்டான். நிச்சயமாக அவனும் அவனுடைய இனத்தாரும் நீங்கள் அவர்களைக் காணமுடியாதவாறு (மறைவாக இருந்து கொண்டு) உங்களை (வழி கெடுக்க சமயம்) பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். நிச்சயமாக நம்பிக்கை கொள்ளாதவர்களுக்குத்தான் அந்த ஷைத்தான்களை நாம் நண்பர்களாக்கி இருக்கிறோம்.

(அல்குர்ஆன் : **7:27**)

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்பட வேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் இறந்துவிட வேண்டாம்.

(அல்குர்ஆன் : **3:102**)

குறிப்பு:

**இஸ்லாத்தையே அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று யாருக்கும் நிர்பந்தமில்லை, எமது மார்க்கம் எமக்கு நிராகரிப்பாளர்களின் மார்க்கம் அவர்களுக்கு. எனவே பிற சமயங்களை மதித்து, பிறர் வணங்குபவற்றை ஏசாது நாம் கொண்ட கொள்கையில் (இஸ்லாத்தில்) தடம்பிரலாது உறுதியாக இருக்கவே அல்குர்ஆன் போதிக்கின்றது.**

**‘நிச்சயமாக நாம் (அவர்களுடைய) அடையாளங்களை உங்களுக்கு விவரித்து விட்டோம். நீங்கள் அறிவுடையவர்களாக இருந்தால் (அறிந்து கொள்ளலாம்.)’’**

**(அல்குர்ஆன் : 3:118)**

## அன்புள்ள அல்ஜன்னத் வாசகர்களே!

**அல்ஜன்னத்தில் வெளியாகும் கட்டுரைகளை வாசிப்பதோடு மட்டுமல்லாமல் உங்கள் விமர்சனங்களையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**

**வாட்ஸ்அப் - 9840828225 / 9841200682**

**மின்னஞ்சல் -** jaqhaljannath@gmail.com

**ஆரோக்கியமான விமர்சனங்கள் அல்ஜன்னத்தில் வெளியிடப்படும்.**

**உங்களின் மார்க்கம் தொடர்பான கேள்விகளை அனுப்புங்கள். பதிலளிக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.**

**கட்டுரை அனுப்புவோர் பிரதிமாதம் 10-ம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

# அடிப்படைக் கொள்கை

**ஷேக் அலாவுதீன்**
(இஸ்லாமிய அழைப்பாளர்)
பொன்மலை, திருச்சி

இறைவனுக்கு இணை வைக்க மாட்டோம் வணக்கத்திற்குரியவன். அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இஸ்லாத்தின் கொள்கை இது தான் என்பதை முஸ்லிம் அல்லாதவர்களும் கூட அறிந்து வைத்துள்ளனர்.

**(“அல்லாஹ்” என்றால் வணக்கத்திற்குத் தகுதியான ஒரே இறைவன் என்பது அதன் பொருள்)**

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்பதில் இரண்டு செய்திகள் அடங்கியுள்ளன.

- அல்லாஹ்வை வணங்க வேண்டும்.(1)
- அல்லாஹ்வைத் தவிர எவரையும் வணங்கக் கூடாது.(2)

இதில் முதலாவது செய்தியை ஓரளவு ஏற்று நடக்கும் முஸ்லிம்கள் இரண்டாவது செய்தியை அறியாதவர்களாகவுள்ளனர். இதன் காரணமாகத் தான் ஒரு பக்கம் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டு இன்னொரு பக்கம் இறந்தவர்களையும், அவர்களை அடக்கம் செய்துள்ள சமாதிகளையும், மகான்கள் என்று உலா வரும் போலிகளையும் வணங்கி வருகின்றனர்.

இவ்விரண்டு செய்திகளில் இரண்டாவது தான் (2) முக்கியமானதாகும். இதைச் சொல்வதற்காகத் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டனர்.

அல்லாஹ்வை வணங்குங்கள் என்று சொல்லித் தருவதற்காகவோ, அல்லாஹ்வின் பண்புகளைச் சொல்லிக் கொடுப்பதற்காகவோ மட்டும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்படவில்லை. ஏனெனில் அம்மக்கள் அல்லாஹ்வை நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். அல்லாஹ்வை வணங்குவதிலும் அவர்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருந்ததில்லை.

அல்லாஹ்வைத் தவிர எவரையும், எதனையும் வணங்கக் கூடாது என்பது தான் அவர்களால் எதிர்க்கப்பட்டது.

இன்றைக்கு முஸ்லிம்களில் பலர் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டு சமாதிகளிலும் வழிபாடு நடத்துகிறார்களே இது போன்று தான் மக்கத்துக் காஃபிர்களின் கடவுள் நம்பிக்கை இருந்தது.

மனிதன் இறந்து விட்டால் அவனது செயல்பாடுகளும் முடிந்து விடுகின்றன என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
நூல்: முஸ்லிம்

**பரிந்துரையை வேண்டுவது குற்றமாகுமா?**

பெரியார்களைப் பிரார்த்திக்கும் நாங்கள் அவர்களுக்கு இறைத்தன்மை உண்டு என்று எண்ணவில்லை; மாறாக, அவர்களும் இறைவனின் அடிமைகள் என்றே கூறுகிறோம். ஆயினும் அவர்கள் இறைவனது நெருக்கத்தைப் பெற்றுள்ளதால் அவர்கள் இறைவனிடம் பெற்றுத் தருவார்கள் என்றே நாங்கள் நம்புகிறோம். சுயமாக எதுவும் அவர்கள் செய்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை; இவ்வாறு நம்புவது எப்படித் தவறாகும்?

இது இவர்களின் தரப்பில் கூறப்படும் நியாயங்களில் ஒன்றாகும்.மேலோட்டமாகப் பார்க்கும் போது இதில் நியாயம் இருப்பது போல் தோன்றினாலும் இதில் எந்த நியாயமும் இல்லை.

இறைவனின் ஆற்றல் அந்தப் பெரியார்களுக்கு உண்டு என்று இவர்கள் நம்பவில்லை என்பது உண்மையே. ஆனால் மற்றொரு வகையில் இறைவனுக்குச் சமமான ஆற்றல் அந்தப் பெரியவர்களுக்கு உண்டு என்று இவர்கள் நம்புகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

எங்கிருந்து அழைத்தாலும், எத்தனை பேர் அழைத்தாலும், எந்த நேரத்தில் அழைத்தாலும், எந்த மொழியில் அழைத்தாலும் அனைத்தையும் ஒரே சமயத்தில் அறிந்து கொள்ளும் ஆற்றல் அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரமே சொந்தமானதாகும். இதே போன்ற ஆற்றல் அந்தப் பெரியார்களுக்கு உண்டு என்று இவர்கள் நம்புகிறார்கள்.

**இறைவனின் ஆற்றல் அந்தப் பெரியார்களுக்கு உண்டு என்று இவர்கள் நம்பவில்லை என்பது உண்மையே. ஆனால் மற்றொரு வகையில் இறைவனுக்குச் சமமான ஆற்றல் அந்தப் பெரியவர்களுக்கு உண்டு என்று இவர்கள் நம்புகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.**

இதன் காரணமாகவே உலகின் பல பாகங்களிலிருந்தும் பலரும் அந்தப் பெரியார்களைப் பிரார்த்திக்கின்றனர். தங்களது பிரார்த்தனையை அல்லாஹ் செவிமடுப்பது போலவே பெரியார்களும் செவிமடுக்கின்றனர் என்று நம்பி இந்த விசயத்தில் இறைவனுக்குச் சமமாகப் பெரியார்களை நம்புகின்றனர்.

முழுக்க முழுக்க இறைத்தன்மை பெற்றவர்களாக மற்றவர்களை எண்ணுவது மாத்திரம் இணைவைத்தல் அன்று. மாறாக, இறைவனது தன்மைகளில் ஏதேனும் ஒரு தன்மை இறைவனுக்கு இருப்பது போலவே மற்றவர்களுக்கும் இருப்பதாக எண்ணுவதும் இணை வைத்தலாகும். இதைப் புரிந்து கொள்ளாததாலேயே இறைவன் அல்லாதவர்களைப் பிரார்த்திக்கின்றனர்.

அல்லாஹ்வையன்றி அவர்களுக்குத் தீமையும், நன்மையும் செய்யாதவற்றை வணங்குகின்றனர். அவர்கள் அல்லாஹ்விடம் எங்களுக்குப் பரிந்துரை செய்பவர்கள் என்றும் கூறுகின்றனர். வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வுக்குத் தெரியாததை அவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறீர்களா? அவன் தூயவன். அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் உயர்ந்தவன் என்று கூறுவீராக! (திருக்குர்ஆன் 10:18)

இறைவனிடம் சிபாரிசு செய்பவர்கள் என்று மக்கத்துக் காபிர்கள் எண்ணியது ஒரு சக்தியுமற்ற கற்சிலைகளைத் தான்; மகான்களை அல்ல என்று சிலருக்குச் சந்தேகம் எழலாம். இது அடிப்படையில்லாத சந்தேகமாகும்.

அல்லாஹ்வைத் தவிர எவரையும், எதனையும் வணங்கக் கூடாது என்பது தான் நமக்கு இடப்பட்ட கட்டளை. இதில் சமாதியையும் சிலைகளையும் வேறுபடுத்திப் பார்க்க எந்த ஆதாரமும் இல்லை. முகாந்திரமும் இல்லை. சிலைகளும், சமாதிகளும் இதில் சமமானவை தான்.

மக்கத்துக் காபிர்கள் வணங்கியது தீயவர்களின் சிலைகளைத் தான். நாங்கள் மகான்களின் சமாதிகளை அல்லவா வணங்குகிறோம் என்றும் சிலர் கேட்கின்றனர்.

**மக்கத்துக் காபிர்கள் வணங்கியது தீயவர்களின் சிலைகளைத் தான். நாங்கள் மகான்களின் சமாதிகளை அல்லவா வணங்குகிறோம் என்றும் சிலர் கேட்கின்றனர்.**

இந்த வாதமும் தவறானதாகும். ஏனெனில் மக்கா காபிர்கள் வணங்கியதும் பெரும்பாலும் நல்லடியார்களையும், நபிமார்களையும் தான். இதற்கு ஹதீஸ்களில் ஆதாரம் உள்ளது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது கஃபாவுக்குள் இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் உருவச்சிலைகளைக் கண்டார்கள். அவற்றைத் தம் கைத்தடியால் அப்புறப்படுத்திய பின்பே உள்ளே நுழைந்தார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி)

நூல்: புகாரி ***1601, 3352, 4289,***

மற்றொரு அறிவிப்பில் இப்ராஹீம் நபி, மர்யம் (அலை) ஆகியோரின் சிலைகள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

நூல்: புகாரி ***2351***

நல்லடியார்களிடம் பிரார்த்தனை செய்வதும், அவர்கள் இறைவனிடம் பரிந்து பேசிப் பெற்றுத் தருவார்கள் என்று நம்பி அவர்களை வழிபடுவதும் மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்டிருக்குமானால் அந்த நபிமார்களின் சிலைகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்புறப்படுத்தியிருக்க வேண்டியதில்லை.

யூத கிறித்தவர்களை அல்லாஹ் சபிப்பானாக! ஏனெனில் அவர்கள் தங்கள் நபிமார்களின் சமாதிகளை வணங்குமிடமாக ஆக்கி விட்டனர்' என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)

நூல்: புகாரி ***436, 437, 1390, 3454, 4441,***

உங்கள் வீடுகளை அடக்கத்தலங்களாக ஆக்காதீர்கள்! மேலும் எனது அடக்கத்தலத்தில் விழா எடுக்காதீர்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)

நூல்: அபூதாவூத் ***1746,***

அவர்களில் நல்லவர் ஒருவர் மரணித்து விட்டால் அவரது அடக்கத்தலத்தில் ஒரு வழிபாட்டுத் தலத்தை எழுப்பிக் கொண்டனர். அவர்களது உருவங்களையும் அதில் செதுக்கிக் கொண்டனர். அல்லாஹ்வின் படைப்புகளிலேயே இவர்கள் தான் மிகவும் கெட்டவர்கள் என்று நபிகள்

நாயகம் (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)

நூல்: புகாரி **427, 434, 1341, 3873**

சமாதிகளின் மீது கட்டடம் கட்டுவதையும், அது பூசப்படுவதையும், அதன் மீது உட்கார்வதையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி)

நூல்: முஸ்லிம் **1610**

இஸ்லாத்தின் பார்வையில் சமாதிகளும், சிலைகளும் சமமானவை தான் என்பதற்கு இந்த நபிமொழிகள் சான்றுகளாக உள்ளன.

சமாதி வடிவம் என்றாலும் கூட அதுவும் இறைவனின் சாபத்திற்குரியதே' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவாக அறிவித்த பின் சமாதிகளை வழிபடலாம் என்ற வாதத்தில் நியாயம் எதுவுமில்லை என்பதை உணர வேண்டும்.

அல்லாஹ் உமக்குத் துன்பத்தை ஏற்படுத்தினால் அவனைத் தவிர அதை நீக்குபவன் யாருமில்லை. அவன் உமக்கு நன்மையை ஏற்படுத்தி விட்டால் அவன் அனைத்துப் பொருட்களின் மீது ஆற்றலுடையவன். (அல்குர்ஆன் **6:17**)

தர்காவில் நடக்கும் அனாச்சாரங்கள்

- ஆடு அறுத்து பலியிடுவது
- மொட்டை போடுவது
- குத்து விளக்கு ஏத்துவது
- தர்காவில் பூ போடுவது / வலம் வருவது
- தேர் இழுத்தல்
- வலம் வருதல்
- பிரார்த்தனை செய்தல்
- குழந்தை வரம் கேட்பது

இறைவனின் இந்தக் கடும் எச்சரிக்கைக்கு அஞ்சி தர்கா வழிபாட்டை விட்டொழிப்போம்.⦿

## யூதர்கள் குறித்து குர்ஆன்

**இஸ்ராயீலின் சந்ததிகளிலிருந்து, காஃபிராகி விட்டவர்கள், தாவூது, மர்யமின் குமாரர் ஈஸா ஆகிய இவர்களின் நாவால் சபிக்கப்பட்டுள்ளனர் ஏனென்றால் அவர்கள் (இறைவன் கட்டளைக்கு) மாறு செய்து கொண்டும், வரம்பு மீறி நடந்து கொண்டும் இருந்தார்கள்.**

**இன்னும் தாம் செய்து கொண்டிருந்த தீய காரியங்களைவிட்டு ஒருவரையொருவர் தடுப்போராகவும் அவர்கள் இருக்கவில்லை; அவர்கள் செய்து கொண்டிருந்தவையெல்லாம் நிச்சயமாக மிகவும் தீயவையாகும்.**

**(நபியே!) அவர்களில் அநேகர் காஃபிர்களையே உற்ற நண்பர்களாகக் கொண்டிருப்பதை நீர் காண்பீர்; அவர்கள் தமக்காக முற்கூட்டியே அனுப்பிவைத்தது நிச்சயமாக கெட்டதேயாகும்; ஏனெனில் அல்லாஹ்வின் கோபம் அவர்கள் மீதுள்ளது; மேலும் வேதனையில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.**

**அவர்கள் அல்லாஹ்வின் மீதும் நபியின் மீதும், அவர் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தார்களானால், அவர்கள், காஃபிர்களைத் (தங்களின்) உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அவர்களில் அநேகர் பாவிகளாகவே இருக்கின்றனர்.**

**நிச்சயமாக யூதர்களையும், இணைவைப்பவர்களையும் முஃமின்களுக்குக் கடும் பகைவர்களாகவே (நபியே!) நீர் காண்பீர்; "நிச்சயமாக நாங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம் என்று சொல்பவர்களை, முஃமின்களுக்கு நேசத்தால் மிகவும் நெருங்கியவர்களாக (நபியே!) நீர் காண்பீர்; ஏனென்றால் அவர்களில் கற்றறிந்த குருமார்களும், துறவிகளும் இருக்கின்றனர் மேலும் அவர்கள் இறுமாப்புக் கொள்வதுமில்லை.**

**(அல்குர்ஆன் 5 : 78-82)**



# அரபியில்தான் குத்பாவா?

M.அப்துர் ரஹ்மான் மன்பஈ
துணை ஆசிரியர்

வெள்ளிக்கிழமை ஜுமுஆ கடமையில் முக்கிய அம்சமாக குத்பா எனும் பிரசங்கமும் உள்ளது. தொழுகைக்கு முன்னர் நிகழ்த்தப்படும் இந்த குத்பா மக்களுக்கு மார்க்க வழிகாட்டுதலை எடுத்துச் சொல்வதற்கு முக்கிய வழியாக இருக்கிறது.

நபி(ஸல்) அவர்கள் நிகழ்த்திய குத்பா பற்றி கூறப்படுவதாவது : நபி (ஸல்) அவர்கள் (ஜுமுஆவின் போது) குர் ஆன் (வசனங்களை) ஓதி, மக்களுக்கு நினைவூட்டி இரு (குத்பா) உரைகள் நிகழ்த்துவார்கள். அவ்விரு உரைகளுக்கிடையே அமர்வார்கள். (முஸ்லிம் 1564 )

நபியவர்கள் குத்பாவில் குர்ஆன் வசனங்களை சொல்லிக் காட்டியிருக்கிறார்கள், மார்க்க விசயங்களை நினைவூட்டியிருக்கிறார்கள். மக்களுக்கு குர்ஆனின் செய்தியை புரிய வைப்பதற்கும் அவர்களுக்கு மார்க்க விஷயங்களை நினைவூட்டுவதற்கும் அவர்களுக்குப் புரியும் மொழியிலேயே குத்பாவில் பேச வேண்டும். இதன்படி நமது இந்தியாவிலும் உலகின் பல பாகங்களிலும் அந்தந்தப் பகுதி மக்களின் மொழி யிலேயே குத்பா எனும் பிரசங்கம் நடைபெறுகிறது.

ஆனால் சில பகுதிகளில் அரபி மொழியை அறவே புரியாத மக்களுக்கும் அரபியில்தான் குத்பா செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை இருந்துகொண்டிருக்கிறது.

இந்த நடைமுறை இருக்கும் பகுதிகளில் அரபியில் குத்பா செய்வதற்கு முன்னர் மின்பருக்கு கீழே நின்று அந்தப்பகுதி மொழியில் குத்பா (பிரசங்கம்) செய்யப்படுகிறது. இந்த முறையில் தமிழ்நாட்டில் மின்பருக்குக் கீழே தமிழில் நிகழ்த்தப்படுகிறது. இவ்வாறு செயல்படும் இமாம்களில் பலர் மின்பருக்குக் கீழே பேசிய தலைப்பை விட்டு விட்டு வேறு தலைப்பில் மின்பரில் ஏறி அரபியில் பேசுகிறார்கள். வேறு சில இமாம்கள் மின்பருக்குக் கீழே பேசியதில் சொன்ன ஒன்றிரண்டு குர் ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் மின்பர் மேல் நின்று இறைப்புகழ், ஸலவாத்துடன் அரபியில் சொல்லிவிட்டு இறங்கி விடுகிறார்கள். இந்த இரு தரப்பினரின் மின்பர் குத்பா பொது மக்களுக்கு புரிவதில்லை.

இந்த இரு வகையினரும் ஜுமுஆ குத்பாவை சடங்கு, சம்பிரதாயமாக ஆக்கியிருப்பது வேடிக்கையாகவும் அதே நேரத்தில் வேதனையாகவும் உள்ளது.

கேட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு புரியாவிட்டாலும் அரபியில் குத்பா நிகழ்த்துவது தவறல்லவா? என்ற

*நியாயமான ஆட்சேபனைக்கு இவர்கள் சொல்லும் தவறான பதில்:*

*இதுதான் பாரம்பரியமான நடைமுறை, குத்பா என்பது ஒரு வணக்கம் அதை நபி(ஸல்) நிகழ்த்திய மொழியிலேயே நிகழ்த்த வேண்டும்.*

இவ்வாறு இவர்கள் இரண்டு காரணங்களை கூறுகிறார்கள். இவர்களின் இரண்டு காரணங்களும் தவறானவை என்பதற்கான ஆதாரங்களை பார்ப்போம்.

**பாரம்பரியமான நடைமுறை**

உண்மையில் பாரம்பரியமான மார்க்கச் சட்ட நூல்களில் அரபி மொழியல்லாத வேறு மொழிகளிலும் குத்பா நிகழ்த்தலாம் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளது.

இமாம் அபூஹனீஃபா(ரஹ்) அவர்களின் கருத்துப்படி அரபியல்லாத மொழியில் ஜுமுஆ குத்பா செய்யலாம். ஆனால் அவர்களின் மானவர்களான அபூ யூசுஃப் (ரஹ்), முஹம்மது (ரஹ்) ஆகியோரின் கருத்துப்படி அது கூடாது.

- பார்க்க: ரத்துல் முஹ்த்தார் பாகம்: 2, பக்: 147 (பதிப்பு: அல்மக்தபா அஷ்ஷாமிலா)

இதேபோல் ஹனஃபி மத்ஹபின் பழைய நூல்களின் சாராம்ஸமாக எழுதப்பட்டுள்ள 'பிக்ஹுல் இபாதாத் அலல் மத்ஹபில் ஹணஃபி' என்ற நூலில் ஜுமுஆவின் ஆறு நிபந்தனைகள் குறித்து கூறப்பட்டுள்ளது. அதில் இறுதியாக, "ஆறாவது நிபந்தனை குத்பா. அதை அரபியல்லாத மொழியில் நிகழ்த்துவதும் சரிதான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. - பக்: 112, (பதிப்பு: அல்மக்தபா அஷ்ஷாமிலா)

அடுத்து, 'அல்மஜ்மூஉ ஷரஹுல் முஹத்தப்' எனும் ஷாஃபி மத்ஹபின் முக்கிய நூலில் ஜுமுஆவுக்கு அரபியில் குத்பா செய்வது நிபந்தனை என்று ஒரு கூற்றும் அது நிபந்தனையல்ல விரும்பத்தக்கது என்று ஒரு கூற்றும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. (நிபந்தனை என்ற கூற்றே மிகச் சரியானது என்று நூலாசிரியர் தமது கருத்தை பதிவு செய்துள்ளார்கள்). - பாகம் 4, பக்: 522. (பதிப்பு: அல்மக்தபா அஷ்ஷாமிலா).

மேலும் 'அல்ஃபிக்ஹுல் இஸ்லாமி வஅதில்லதுஹு' என்ற நூலில், "குத்பா செய்பவருக்கு அரபி தெரிந்திருந்தாலும் அவர் அரபியல்லாத மொழியில் குத்பா செய்வதை ஹனஃபி அறிஞர்கள் ஆகுமானது என்கின்றனர். மக்கள் அரபியராக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும் ஆகுமானதே என்று கூறுகின்றனர்" என்று எழுதப்பட்டுள்ளது. பாகம்: 2, பக்: 1304. (பதிப்பு: அல்மக்தபா அஷ்ஷாமிலா)

**இதுதான் பாரம்பரியமான நடைமுறை, குத்பா என்பது ஒரு வணக்கம் அதை நபி(ஸல்) நிகழ்த்திய மொழியிலேயே நிகழ்த்த வேண்டும். இவ்வாறு இவர்கள் இரண்டு காரணங்களை கூறுகிறார்கள்.**

இப்படியெல்லாம் பாரம்பர்ய மார்க்க சட்ட நூல்களிலும் அவற்றிலிருந்து எடுத்து எழுதப்பட்ட பிற்கால நூல்களிலும் ஜுமுஆ குத்பா அரபியல்லாத மொழியில் நிகழ்த்தப்படுவது ஆகுமானது என்ற கருத்து பதிவு செய்யப்பட்டிருந்தும் அது அறவே ஆகாது என்று தற்காலத்தில் சிலர் சாதிக்கிறார்கள்.

பலரும் அது ஆகாது என்றுதானே சொல்கிறார்கள் என்று கேள்வி எழுப்பலாம். ஹனஃபி அறிஞர்கள் பொதுவாகவே ஆகுமானது என்ற நிலைப்பாட்டில் இருப்பதை மேற்கண்ட அல்ஃபிக்ஹுல் இஸ்லாமி வஅதில்லதுஹு நூலின் பதிவு நமக்கு சுட்டிக்காட்டுகிறது. (ஆரம்ப காலத்தில் கருத்து வேறுபாடு இருந்திருந்தாலும் கூட!).

அத்துடன் பலர் ஒன்றை கூடாதென்றும் சிலர் அதை கூடும் என்றும் சொல்லும்போது சிலர் சொல்வதுதான் சரியானது எனும்போது சரியானதை ஏற்பதுதான் முறையாகும்.

இந்த அடிப்படையில் குத்பா என்பது பிரசங்கமாகும். அதாவது மக்களுக்கு அறிவுரையும் உபதேசமும் செய்வது. மக்களுக்கு புரியும் மொழியில் அறிவுரையும் உபதேசமும் செய்தால்தான் அது பிரசங்கமாக ஆகும். இல்லாவிட்டால் பிரசங்கமாக ஆகாது. இந்த ரீதியில் அரபியல்லாத மொழியில் ஜுமுஆ குத்பா நிகழ்த்துவது ஆகுமானது என்பதே சரியான கருத்து.

அடுத்து, குத்பா அரபியில்தான் நிகழ்த்தப்பட வேண்டும் என்று சொல்பவர்கள் கூறும் இன்னொரு காரணம் : "குத்பா என்பது ஒரு வணக்கம். அந்த வணக்கத்தை நபி (ஸல்) அவர்கள் அரபி மொழியில்தான் செய்தார்கள். அதனால் நாமும் அதை அரபியில்தான் செய்ய வேண்டும்"

குத்பா என்ற பிரசங்கம் மக்களுக்கு அறிவுரையும் உபதேசமும் செய்வதாகும். அது ஒரு வணக்கம் என்று வைத்துக் கொண்டால் மக்களுக்கு அறிவுரையும் உபதேசமும் நிறைவேறினால்தான் அந்த வணக்கம் நிறைவேறும். அதாவது தமிழ் மக்களுக்கு தமிழிலும் ஆங்கில மக்களுக்கு ஆங்கிலத்திலும் பிரசங்கம் நடந்தால்தான் அந்த குத்பா பிரசங்கம் என்ற வணக்கம் நடந்ததாக ஆகும். ஆனால் அரபியில் எழுதப்பட்ட குத்பா வாசகங்களை மின்பர் மீது நின்று படிக்கக் கூடிய பலருக்கும் அவர்கள் படிப்பது அவர்களுக்கே புரிவதில்லை.

குத்பா ஒரு வணக்கம் என்று வைத்துக் கொண்டால் அதை தமிழில் நிகழ்த்துவது மூலமாகவும் வணக்கமாக ஆகும் என்பதை ஓர் உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் "துஆவே வணக்கமாகும்" என்றார்கள். (அபூ தாவூத், திர்மிதீ). இப்போது தமிழ் பேசும் ஒரு மனிதர், தான் ஆரம்பிக்க இருக்கும் தொழில் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்றும் அதில் அதிகமான லாபம் கிடைக்க வேண்டும் என்றும் தனது மொழியில் துஆ செய்தார் என்றால் அது நபியின் கூற்றுப்படி துஆவாக ஆகுமா? ஆகாதா? துஆவாக ஆகுமென்றுதான் எல்லோரும் சொல்வோம்.

இதே போல்தான் நபியவர்கள், பிரசங்கம் (குத்பா) என்ற வணக்கத்தை காட்டித்தந்தார்கள். இப்போது தமிழ் பேசும் ஒருவர் தமிழ் பேசும் மக்களுக்கு ஜுமுஆ தொழுகைக்கு முன் தமிழில் குத்பா (பிரசங்கம்) செய்தால் குத்பா என்ற வணக்கம் நிறைவேறிவிடும். அல்ஹம்து லில்லாஹ்.

ஆக இதுவரை நாம் பார்த்த ஆதாரங்கள் மூலம் அரபியல்லாத மொழியில் ஜுமுஆ குத்பா செய்யக் கூடாது என்று சொல்லப்படுவது தவறான கூற்று என்பது தெளிவாகிவிட்டது.

**கூடுதல் தகவல் தமிழகத்தின் பழமையான முஸ்லிம் ஊரான கீழக்கரையில் ஜுமுஆ குத்பா மின்பர் மீது தமிழில்தான் நிகழ்த்தப்படுகிறது. பல நூறாண்டுகளாக இவ்வாறுதான் நடந்துகொண்டிருக்கிறது என்று அங்குள்ள இமாம் ஒருவர் கூறுகிறார். எங்கள் ஊர் தொண்டியில் ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன்பு வரை இந்த நடைமுறை இருந்துகொண்டிருந்தது. மேலும் பல பகுதிகளில் இந்த நடைமுறை ரசூல்(ஸல்) காலம் தொட்டு இருந்து கொண்டிருக்கிறது.**

ஜுமுஆ குத்பாவை அரபியில்தான் செய்ய வேண்டும் என்ற தவறான கருத்தை விட்டொழித்து அந்தந்த பகுதி மொழியில் மின்பரில் நின்று குத்பா செய்வதை நடைமுறைபடுத்த அறிஞர்கள் முன்வர வேண்டும்.



# மலேசியாவில் சிறப்புடன் இயங்கி வரும் உணவகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆட்கள் தேவை

**1.சமையல்காரர்**

**2.புரோட்டா மாஸ்டர்,**

**3.தேநீர் மாஸ்டர்**

**4.தந்தூரி மாஸ்டர்,**

**5.வெய்ட்டர்**

**6.முடி திருத்துபவர் மற்றும்**

**தொழிற்சாலை பணியாளர்கள்**

தகுந்த ஊதியம் வழங்கப்படும்
அனுபவம் உள்ளவர்களும்
அனுபவம் இல்லாதவர்களும்

**உடன் தொடர்பு கொள்ளவும்**

**TAUFIQ MANPOWER CONSULTANTS (P) LTD**

30, THIRUVENGADAM STREET, PUDUPET, CHENNAI-600002.

044 - 28513303, 28593303, 28419682, 28546050, 28592143
FAX: 044 – 28412726

## சென்னையில் வெளியூர் வாசிகள் தங்குவதற்கு

சென்னை எழும்பூர் இரயில் நிலையம் எதிரில் குடும்பத்துடன்
பாதுகாப்பாக தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன்
**A/C - Non A/C** ரூம்கள் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்புக்கு: **Taufiq inn Guest House,**
#5, Gandhi Irwin Road, Egmore, Chennai - 600 008.
(Near KPN Travels) 044 28193303, 28193033

# நேர நிர்வாகம்



**மௌலவி பஷீர் ஃபிர்தவ்ஸி**
*துணை ஆசிரியர்*

மனிதனைப் படைத்த அல்லாஹு தஆலா அவனுக்கு எண்ணிலடங்கா அருட்கொடைகளையும் வழங்கியுள்ளான் அவ்வருட்கொடையில் ஒன்று மனிதனது ஆயுள்! ஒரு மனிதன் பிறந்தது முதல் அவன் மரணிக்கும் வரையிலான நேரம் தான் ஒருவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆயுள் அது குறைவாக இருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் சரி அந்த நேரத்தை பயனுள்ளதாகவும் பயனற்றதாகவும் ஆக்குவதென்பது ஒவ்வொரு தனிமனிதனின் விருப்பமாகும்.

யார் தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுளைவைத்து மறுமையின் வெற்றியை தேடிக்கொள்வானோ அவன் தான் தனது நேரத்தை சரியாக பயன்படுத்திக் கொள்பவன் ஆவான் எனவே தான் வாழ்க்கையின் வெற்றி தோல்வியை காலத்தைவைத்து அல்லாஹ் நிர்ணயம் செய்துள்ளான்

காலத்தின் மீது சத்தியமாக.நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான்.

(அல்குர்ஆன் 103:1,2)

அல்லாஹ் அவனது படைப்புகளில் தான் நாடியவற்றின் மீது சத்தியம் செய்வான் அப்படி அல்லாஹ் சத்தியம் செய்யும் பொருள்கள் அனைத்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

அல்லாஹ் கூறுகிறான்,

விடியற் காலையின் மீது சத்தியமாக.

(அல்குர்ஆன் 89:1)

(இருளால்) தன்னை மூடிக்கொள்ளும் இரவின் மீது சத்தியமாக.

(அல்குர்ஆன் 92:1)

முற்பகல் மீது சத்தியமாக. (அல்குர்ஆன் 93:1)

இவ்வசனங்கள் அனைத்தும் நேரத்தின் முக்கியத்துவதை உணர்த்துகிறது உண்மையில் நேரம் தான் நமது வாழ்க்கையாக உள்ளது நாம் மறுமையின் வெற்றிக்காக தான் படைக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையை யார் உணர்ந்துள்ளார்களோ அவர்கள் நேரத்தை வீணடிக்கமாட்டார்கள் அதன் அருமை தெரியாதவர்கள் தான் அதனை வீணடிப்பார்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மனிதர்களில் அதிகமானோர் இரண்டு அருட்செல்வங்களின் விஷயத்தில் (ஏமாற்றப்பட்டு) இழப்புக்குள்ளாகி விடுகின்றனர். 1. ஆரோக்கியம். 2. ஓய்வு நேரம்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி)

நூல்: ஸஹீஹுல் புஹாரி **6412**

நேரத்திற்கு அதிக முக்கியத்துவமுள்ளது கடந்துபோன நேரம் ஒருபோதும் திரும்பிவராது எனவே நாம் கிடைக்கும் நேரத்தை அதிகமாக சரியாக பயன்படுத்திகொள்ளவேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள், "நீ மாலை நேரத்தை அடைந்து விட்டால் காலைவேளையை எதிர்பார்க் காதே! நீ காலைவேளையை அடைந்து விட்டால் மாலை நேரத்தை எதிர்பார்க்காதே! நீ நோய்வாய்ப்படும் நாளுக்காக உனது ஆரோக்கியத்தில் சிறி(து நேரத்)தைச் செலவிடு. உனது இறப்பு(க்குப் பிந்திய நாளு)க்காக உனது வாழ்நாளில் சிறி(து நேரத்)தைச் செலவிடு" .

நூல்:ஸஹீஹுல் புஹாரி

இமாம் அல் ஹஸனுல் பஸரி அவர்கள் கூறினார்கள்

ஓ! மனிதா பகல் உன் விருந்தாளி அதனிடத்தில் நல்லவிதமாக நடந்துகொள் அதனிடத்தில் நீ நல்லவிதமாக நடந்துகொண்டால் உன்னை புகழ்ந்தவாறு கடந்துசெல்லும் அதனிடத்தில் நீ மோசமாக நடந்துகொண்டால் உன்னை இகழ்ந்தவாறு கடந்துசெல்லும். அதே போன்று தான் உன் இரவும்.

ஓ! மனிதா நிச்சயமாக நீ நாட்களின் தொகுப்பாகும் ஒரு நாள் சென்றுவிட்டால் உன்னில் சிறுபகுதி சென்று விடுகிறது. கொஞ்சம் சென்றுவிட்டால் அனைத்தும் சென்றுவிட நெருங்கிவிட்டது இதை நீ அறிந்து அமல் செய்.

தற்போதைய காலத்தில் நம்மில் பலரும் அதிகமான ஓய்வு நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கிறோம் வீடுகளில் முடங்கி கிடக்கிறோம் ஆனாலும் நேரத்தை எப்படி செலவிடுவது என்று தெரியாமல் இருப்பதால் அதிகமான நேரத்தை வீணடித்துகொண்டிருக்கிறோம்.

**தற்போதைய காலத்தில் நம்மில் பலரும் அதிகமான ஓய்வு நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கிறோம் வீடுகளில் முடங்கி கிடக்கிறோம் ஆனாலும் நேரத்தை எப்படி செலவிடுவது என்று தெரியாமல் இருப்பதால் அதிகமான நேரத்தை வீணடித்துகொண்டிருக்கிறோம்.**

**நேரம் வீணாவதற்கான காரணங்கள்.**

*1.*இலக்கில்லாமல் வாழ்க்கையின் இலட்சியத்தை புரியாமல் அதைபற்றி சிந்திக்காமல் இருப்பது

*2.*நேரத்தை பயனில்லாமல் வீணாக கழிக்கக்கூடிய நண்பர்களுடன் இருப்பது

3.ஓய்வு நேரத்தில் என்ன செய்வதென்று அறியாமல் இருப்பது

4.பொடுபோக்கான நேரத்தை வீணடிக்கக்கூடிய அதிகரித்து இருப்பதும் அதில் மக்கள் அதிகமாக மூழ்கிருப்பதும் நேரம் பாழாவதற்கான காரணமாக உள்ளது.

அறிவாளி தனது கடந்த கால வாழ்க்கையை எண்ணிப்பார்த்து வீணாக கழித்த நேரத்திற்காக வருந்துவார் அதே போன்று மறுமையில் இதற்காக அனைவரும் வருந்துகிற நேரம் வர உள்ளது ஒவ்வொரு மனிதனுக்கும் மறுமையில் அவனது அமல்களில் ஏடு கொடுக்கப்பட உள்ளது அந்நேரத்தில் இந்த உலகில் அவன் வீணாக கழித்த நேரத்தை எண்ணி வருந்துவான்

அல்லாஹ் கூறுகிறான்,

அந்நாளில் நரகம் முன் கொண்டு வரப்படும் போது அந்நாளில் மனிதன் உணர்வு பெறுவான்; அந்த (நாளில்) உணர்வு (பெறுவதினால்) அவனுக்கு என்ன பலன்.

"என் (மறுமை) வாழ்க்கைக்காக நன்மையை நான் முற்படுத்தி (அனுப்பி)யிருக்க வேண்டுமே!" என்று அப்போது மனிதன் கூறுவான்.

(அல்குர்ஆன் 89:23,24)

மறுமையில் இவ்வாறு ஒருவர் புலம்பாமல் இருக்க வேண்டுமென்றால் உலகில் அவர் தனது வாழ்க்கையை திட்டமிட்டு அமைத்துகொள்ளவேண்டும்.

"அல்லாஹ்வுக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளில் குறை செய்து விட்டதின் கைசேதமே! பரிகாசம் செய்பவர்களில் நிச்சயமாக நானும் இருந்தேனே"! என்று (ஒவ்வொருவரும்) கூறாமல் இருப்பதற்காகவும்;

**மறுமையில் இவ்வாறு ஒருவர் புலம்பாமல் இருக்க வேண்டுமென்றால் உலகில் அவர் தனது வாழ்க்கையை திட்டமிட்டு அமைத்துகொள்ளவேண்டும்.**

(அல்குர்ஆன் 39:56)

காலத்தின் மீது சத்தியமாக. நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான்.ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை).

(அல்குர்ஆன் 103:1,2,3)




# கேம் விபரீதங்கள்

M.அப்துர் ரஹ்மான் மன்பஈ
துணை ஆசிரியர்

அறிவியல் முன்னேற்றத்தினால் நமக்கு கிடைத்திருக்கும் சாதனங்களால் அதிகமான பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

அதே நேரத்தில் இவற்றை முறையில்லாமல் பயன்படுத்துவதால் பலரும் தங்களின் இம்மை மறுமை வாழ்வுக்கு கெடுதலை ஏற்படுத்திக் கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.

இப்படிப்பட்ட சாதனங்களில் முக்கியமானதாக நம் அனைவர் கைகளிலும் இருக்கும் அலைபேசி (செல்ஃபோன்) உள்ளது. இந்த சாதனம் மூலம் மனித சமூகம் மிகப்பெரும் பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் நம்மில் சில பெரியவர்களும் பல இளைஞர்களும் சிறுவர்களும் இந்த சாதனத்தில் உள்ள பொழுதுபோக்கு அம்சங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதால் தங்களின் பொன்னான நேரத்தையும் ஆரோக்கியத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் அல்லாஹ்வுக்கும் மனிதர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை வீணடிப்பதின் காரணமாக அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளாகும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள் அவர்கள் அறிவில்லாமல் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி, (அவற்றால் மக்களை) அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுக்கவும், அல்லாஹ்வின் பாதையைப் பரிகாசமாக்கிக் கொள்ளவும் (முயல்கிறார்கள்) இத்தகையோருக்கு இழிவுதரும் வேதனையுண்டு.(அல் குர்ஆன் 31:6)

இத்தகைய பாதகமான பொழுதுபோக்குகளில் இந்த சாதனத்தில் உள்ள விளையாட்டுக்கள் (கேம்கள்) குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. இந்த விளையாட்டுக்கள் பொழுதுபோக்கு என்பதைத் தாண்டி பலருக்கு அத்தியாவசியத் தேவைகளுக்கு நிகரானவையாக ஆகிவிட்டன. இந்த விளையாட்டுகளுக்காக மிக அதிகமான நேரங்களை செலவிடுவது இதற்கு அடையாளமாக உள்ளது.

**இந்த கேம்களால் விளையும் பாதகங்கள் அதிகமாக உள்ளன. அவை:**

- பல மணி நேரங்களை இந்த விளையாட்டுகளில் கழிப்பது. இவற்றில் அதிகப்படியாக செலவிடப்படும் நேரங்களில் எத்தனையோ நல்ல காரியங்களில் ஈடுபடலாம், பயனுள்ள விஷயங்களை கற்றுக்கொள்ளலாம்.

- தொழுகைகளில் அலட்சியம் ஏற்படுவது. தொழுதால் கூட ஈடுபாடு இல்லாமலும் நிதானம் இல்லாமலும் தொழுவது.

- கல்வி கற்பதில் பலவீனம் ஏற்படுவது. பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல் போவதால் படிப்பில் பின்தங்குவது.

- இந்த விளையாட்டுகளுக்கு அடிமையாகி விடுவது. இவற்றுக்கு அடிமையாவதின் அடையாளம் எப்போதும்

இந்த விளையாட்டுகளின் நினைவாகவே இருப்பது, விளையாட்டை நிறுத்தும் படி (பெற்றோரோ பெரியோரோ) சொல்லும்போது கோபப்படுவது. அதேபோல் விளையாட விரும்பும் நேரத்தில் ஏதேனும் காரணத்தால் விளையாட முடியாமல் போனால் கடும் சோகத்துக்கும் மன நெருக்கடிக்கும் உள்ளாவது.

- அடிமையானவர்களில் ஒரு சிலர் மனோரீதியான பாதிப்புக்கு ஆளாவது.

- இளவயதிலேயே பார்வை குறைபாடு ஏற்படுவது.

- குடும்பத்தினர் மற்றும் சமூகத்தை விட்டு விலகி இருப்பது. இப்படி பிறருடன் கலக்காமலிருப்பதால் மக்களுடன் நல்ல முறையில் பழகத்தெரியாமல் போகும்.

- இந்த விளையாட்டுகளில் பணத்தை செலவிட்டு வீண்விரயம் செய்வது.

- இந்த விளையாட்டுகளில் சிலவற்றில் இணைவைப்பு உள்ளிட்ட பாவமான காரியங்கள் கலந்திருக்கின்றன. இதனால் விளையாட்டு என்ற பெயரில் மார்க்கத்தின் அடிப்படைக்கே எதிரான காரியத்தில் ஈடுபடும் நிலை ஏற்படும்.

இப்படி பல விதமான விபரீதங்களை கொண்டவையாக இந்த விளையாட்டுகள் இருந்து கொண்டிருக்கின்றன.

**இந்த விபரீதங்களிலிருந்து பிள்ளைகளை பாதுகாக்கும் வழிமுறைகளை பெற்றோர்கள் தெரிந்திருக்க வேண்டும். அவை:**

- பிள்ளைகள் கேம் விளையாடும்போது பெற்றோரும் உடனிருக்கலாம். அப்போது அவற்றில் தவறான விஷயம் வந்தால் அதை சுட்டிக்காட்டலாம். அதிகப்படியான நேரத்தை அவற்றில் செலவிடாமல் தடுத்து விடலாம்.

- மூளைக்கு வேலையும் மனதுக்கு மகிழ்ச்சியும் தரக்கூடிய பொழுதுபோக்கு விஷயம் எதையேனும் மாற்று ஏற்பாடாக செய்து கொடுக்கலாம்.

- அவசியம் கேம் விளையாடித்தான் ஆக வேண்டும் என்றால் குறிப்பிட்ட அளவு நேரம் மட்டும் என்று வரையறுத்துக் கொடுப்பது. (ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் என்பதுபோல்.) இப்படி வரையறுப்பதன் மூலம் அளவுக்கதிகமான நேரம் கேம் விளையாடுவதை விட்டு தடுத்து விடலாம்.

- தாய்மார்கள் பிள்ளைகளின் கத்துதலுக்கும் அழுகைக்கும் இரக்கப்பட்டு அவர்களின் கோரிக்கைகளுக்கெல்லாம் செவி சாய்த்து விடக்கூடாது. குறிப்பாக இந்த கேம்கள் விஷயத்தில் உறுதி தேவை.

- வளரும் சிறு பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் மனிதர்களாகிய நாம் படைக்கப்பட்டதின் நோக்கத்தை எடுத்துக் கூறிக்கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வை வணங்குவதுதான் நாம் படைக்கப்பட்டதின் நோக்கம். அத்துடன் அல்லாஹ்வின் மார்க்கத்தை அறியாத மக்களிடம் அவனது மார்க்கத்தை எடுத்துச் சொல்வதும் நன்மையை ஏவி தீமையை தடுப்பதும் நமது முக்கிய பணி என்பதையும் அறிவுறுத்தவும் வேண்டும்.

- நமது பிள்ளைகளுக்காக நாம் அதிகமாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். அவர்கள் நேர்வழியில் இறுதி வரை நிலைத்திருக்கவும் எல்லாத் தீங்குகளில் இருந்தும் அல்லாஹ் அவர்களை பாதுகாக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்க வேண்டும்.

“எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம்; நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்” என்பது இறைவாக்கு.

(அல்குர்ஆன் 29:69) ⦿



# கொரானா வைரஸ்

**ஜைனப் காதர் சித்தீகிய்யா**

இன்று உலக மக்கள் அனைவராலும் உச்சரிக்கப்படக்கூடிய ஒரே பெயர் கோரானா. இது உருவாக்கப்பட்ட சதியா? வரவேண்டிய விதியா? என்ற பட்டிமன்றத்தின் தீர்வு எதுவாயினும் அல்லாஹ்வால் விதியாக்கப்பட்ட சோதனை என்பதே நம் ஈமான்.

இந்நோய் வராத பலர் ஒவ்வொரு நாளும் தனக்கு வந்துவிடுமோ என்ற பயத்திலும், தனக்கு வரவே வராது என்ற அசட்டு தைரியத்தில் சிலரும் நாட்களை கடக்கிறார்கள்.

வந்தவர் தனக்கேற்பட்ட நோயின் தாக்கத்தை தாங்க முடியாமலும், தன் பொருளாதார நிலை குறித்த கவலையோடும் விடியுமா? என நாட்களை கடக்கிறார்கள். சிலர் உறவுகளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்; சிலர் உறவுகளால் சோதிக்கப்பட்டவர்கள்.

இந்நோயிலிருந்து மீண்டவர்கள், உடல் பலஹீனத்தால் தளர்வுற்ற நிலையில் இருக்க, அக்கறையோடு விசாரிப்பவர்கள், பாதம், முந்திரி, பிஸ்தா என சத்துள்ள பொருட்களை சாப்பிடுங்கள் என அறிவுறுத்த, அந்த பெயர்களை பேப்பரில் எழுதி தண்ணீரில் கரைத்து தான் குடிக்க இயலும் என்ற சூழ்நிலை பலருக்கு.

மாண்டவர்கள், ரஹ்மான் அவர்களை பொருந்தி கொள்ள வேண்டும். அவர்களின் குடும்பங்கள், தாயின்றி ஒரு புறம், தந்தையின்றி ஒரு புறம், பிள்ளைகள் இன்றி மறுபுறம் என ஆதரவற்றவர்களாக, அபலைகளாக, அநாதைகளாக தவிக்கின்றனர்.

இதை மூன்றாம் உலகப்போர் என்கிறார்கள். அதுபற்றி நமக்கு அறிவில்லை. ஆனால் உலக மக்கள் அனைவரின் பாவத்தின் பரிசு இது என்பதை மட்டும் உணர முடிகிறது.

**யார் யாருக்கு என்ன பாவம் செய்தோமோ?!**

படைத்தவனின் பக்கமே நம் மீளுதல் உள்ளது. அவனை நோக்கி நம் இருகரங்களை ஏந்தி பிரார்த்தித்தால் மாத்திரமே விடிவு.

'உங்களுடைய இறைவனிடம் நீங்கள் பாவமன்னிப்புகோரி இன்னும், அவன் பக்கமே மீளுங்கள்; நிச்சயமாக என்னுடைய இறைவன் மிக்க கிருபையுடையவனாகவும், பிரியமுடையவனாகவும் இருக்கிறான்".

(அல்குர்ஆன் 11:90)

திருக்குர்ஆன் விளக்கவுரை!

**சூரத்துல் ஃபாத்திஹாவின் சிறப்புகள்:.**

அபூசயீத் பின் முஅல்லா (ரலி) அவர்கள் கூறியதாவது,

நான் (மஸ்ஜிதுந் நபவி) பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தேன். அப்போது என்னை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அழைத்தார்கள. நான் அவர்களுக்கு பதிலளிக்கவில்லை. ஆகவே, நான் (தொழு.து முடித்த பின்), அல்லாஹ்வின் தூதரே! (தாங்கள் அழைத்தபோது) நான் தொழுது கொண்டிருந்தேன் என்று சொன்னேன், அதற்கு அவர்கள், உங்களுக்கு வாழ்வளிக்கக் கூடியதன் பக்கம், இறைத்ததூதர் உங்களை அழைக்கும்போது அல்லாஹ்வும் அவனுடைய தூதர் உங்களை அழைக்கும்போது அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் (விரைந்து) பதிலளியுங்கள் என்று (8:24ஆவது வசனத்தில்) அல்லாஹ் கூறவில்லையா என்று கேட்டார்கள் பிறகு என்னிடம், குர்ஆனின் அத்தியாயங்களிலேயே மகத்துவமிக்க ஓர் அத்தியாயத்தை நீ பள்ளிவாசலிலிருந்து வெளியே செல்வதற்கு முன்னால் நான் உனக்குக் கற்றுத் தருகிறேன் என்று சொன்னார்கள். பிறகு என் கையைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் வெளியே செல்ல முனைந்தபோது நான் அவர்களிடம், நீங்கள் குர்ஆனின் அத்தியாயங்களிலேயே மகத்துவ மிக்க ஓர் அத்தியாயத்தை நான் உனக்கு கற்றுத் தருகிறேன் என்று சொல்லவில்லையா என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அது அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் (என்று தொடங்கும் அல்ஃபாத்திஹா அத்தியாயம்)தான். அவை திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு வசனங்கள் (அஸ்ஸப்உல் மஸானீ) ஆகும்எனக்கு அருளப்பட்டுள்ள மகத்துவம் பொருந்திய குர்ஆன் ஆகும் என்று சொன்னார்கள். நூல்: ஸஹீஹுல் புஹாரி **4474.**

அபூஹுரைரா(ரழி) உபைப் பின் கஅப் அவர்களிடமிருந்து அறிவிக்கிறார் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் தவ்ராத்திலோ இன்ஜிலிலோ உம்முல் குர்ஆனைப்போன்ற ஒரு அத்தியாயத்தை அல்லாஹ் இறக்கவில்லை அது திரும்பதிரும்ப ஓதப்படும் ஏழுவசனங்களாகும் அதனை நான்(அல்லாஹ்) எனக்கும் என் அடியானுக்கும் மத்தியில் பங்கிட்டுவைத்துள்ளேன் என் அடியானுக்கு அவன் என்ன கேட்கிறானோ அது உள்ளது.

நூல்: சுனனுத் திர்மிதீ 3125. இமாம் அல்பானி இதனை ஸஹீஹ் என்று கூறியுள்ளார்.

**நபி(ஸல்) அவர்களுக்கு முன் எந்த நபிக்கும் வழங்காத ஒளி சூரத்துல் ஃபாத்திஹா**

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அமர்ந்திருந்தபோது தமக்கு மேலிருந்து ஒரு சப்தம் வருவதைக் கேட்டார் அவர். அப்போது வானத்தை அண்ணாந்து பார்த்த ஜிப்ரீல் (அலை) அவர்கள், "இதோ, வானில் இதுவரை திறக்கப்பட்டிராத ஒரு கதவு இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. (அதன் சப்தமே இப்போது கேட்டது.)" என்று கூறினார்கள்.

அந்தக் கதவு வழியாக ஒரு வானவர் இறங்கி (நபியவர்களிடம்) வந்தார். அப்போது ஜிப்ரீல்(அலை) அவர்கள் "இதோ இந்த வானவர் இப்போதுதான் பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார். இதற்கு முன் எப்போதும் அவர் பூமிக்கு இறங்கியதேயில்லை" என்று கூறினார்கள்.

தொடர்ச்சி பக்கம் - 28

# மறுமையின் அடையாளங்கள்

அவ்ஃப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

தபூக் போரின்போது நபி(ஸல்) அவர்களிடம் நான் சென்றேன். அவர்கள் ஒரு தோல் கூடாரத்தில் இருந்தார்கள். அப்போது அவர்கள், "இறுதி நாள் வருவதற்கு முன்பு (அதற்குரிய) ஆறு அடையாளங்கள் நிகழும். அவற்றை எண்ணிக்கொள்" என்றார்கள்:

1.எனது மரணம். 2.பைத்துல் மக்திஸ் வெற்றி கொள்ளப்படுதல். 3.ஆடுகளுக்கு ஏற்படும் (ஒரு வகை) நோயைப் போன்ற கொள்ளை நோய் உங்களைப் பீடித்தல். (அதனால் ஏராளமானவர்கள் இறந்துபோய் விடுவார்கள்.) 4.பிறகு செல்வம் பெருகி வழியும். எந்த அளவுக்கென்றால் ஒருவருக்கு நூறு பொற்காசுகள் கொடுக்கப்பட்ட பின்பும் (அதனை அற்பமாகக் கருதி) அவர் அதிருப்தியுடனிருப்பார். 5.பிறகு தீமையொன்று தோன்றும். அரபுகளின் வீடுகளில் அது நுழையாத வீடு எதுவும் இருக்காது. 6.பிறகு உங்களுக்கும் (கிழக்கு ரோமானியரான) மஞ்சள் நிறத்தாருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று ஏற்படும். (அதை மதிக்காமல்) அவர்கள் (உங்களை) மோசடி செய்துவிடுவார்கள். பிறகு உங்களை எதிர்த்துப் போரிடுவதற்காக எண்பது கொடிகளின் கீழே (அணி வகுத்து) அவர்கள் வருவார்கள். ஒவ்வொரு கொடிக்கும் கீழே பன்னிரண்டாயிரம் போர் வீரர்கள் இருப்பார்கள். நூல் : ஸஹீஹுல் புஹாரி 3176

தனது மரணத்திற்கு பின்னர் நிகழக்கூடிய மறுமைக்கு முன் நிகழவுள்ள சில அடையாளங்களை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் முன்னறிவிப்புசெய்துள்ளார்கள். அல்லாஹ்வின் தூதரின் மரணம் நிகழ்ந்து விட்டது அதே போன்று பைத்துல் மக்திஸ் வெற்றி கொள்ளப்படுதல் என்பதும் உமர் அவர்களின் கிலாஃபத்தில் நடந்தேறியது அதன் பின்னரும் பல முறை வெற்றிகொள்ளப்பட்டுள்ளது என்றாலும் நபி அவர்கள் தமது மரணத்தை தொட்டு நிகழும் ஒன்றாக கூறுவதிலிருந்து சமீபமாக நிகழக்கூடிய வெற்றி என்பது தான் சரியாக இருக்கும்.

ஆடுகளுக்கு ஏற்படும் கொள்ளை நோய் என்பது அவைகளின் மூக்கிலிருந்து வடியும் திரவமாகும் அதன் மூலம் உடனே மரணம் நிகழ்ந்து விடும். உமர் அவர்களின் ஆட்சியில் ஃபலஸ்தீனில் உள்ள அமவாஸ் என்ற பகுதியில் பைத்துல் மக்திஸ் வெற்றி கொள்ளப்பட்ட பின் இந்த கொள்ளை நோய் பரவியது. இந்த நோயினால் மூன்று நாளில் எழுபதாயிரம் பேர் இறந்துபோனார்கள்.

செல்வம் பெருகி வழியும் என்பதைப் பொறுத்தவரை உஸ்மான் அவர்களின் ஆட்சியில் நாடுகள் வெற்றிகொள்ளப்பட்ட பின் செல்வம் பெருகியது.

பிறகு தீமையொன்று தோன்றும். அரபுகளின் வீடுகளில் அது நுழையாத வீடு எதுவும் இருக்காது என்பது உஸ்மான் அவர்களின் கொலையைத் தொடர்ந்து அரபுலகில் தோன்றிய ஃபித்னாவைக் குறிக்கும். ரோமர்களுடனான ஒப்பந்தம் என்பது இதுவரையில் நடந்தேறவில்லை.

பார்க்க: ஃபத்ஹுல் பாரி மற்றும் ஃபைளுல் கதீர்.

பக்கம் - 26ன் தொடர்ச்சி

அவ்வானவர் சலாம் கூறிவிட்டு, "உங்களுக்கு முன் எந்த இறைத்தூதருக்கும் வழங்கப் பெற்றிராத இரு ஒளிச்சுடர்கள் உங்களுக்கு வழங்கப்பெற்றுள்ள நற்செய்தியைப் பெறுங்கள். "அல்ஃபாத்திஹா" அத்தியாயமும் "அல்பகரா" அத்தியாயத்தின் இறுதி வசனங்களுமே அவை. அவற்றிலுள்ள (பிரார்த்தனை வரிகளில்) எதை நீங்கள் ஓதினாலும் அது உங்களுக்கு வழங்கப் பெறாமல் இருப்பதில்லை"என்று கூறினார்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம்:1472.

**சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவதின் மூலம் தான் அல்லாஹ்விற்கும் அடியானுக்கும் மத்தியில் உரையாடல் நிகழ்கிறது.**

அப்துர் ரஹ்மான் பின் யஅகூப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூஹுரைரா(ரலி) அவர்கள் குர்ஆனின் அன்னை (எனப்படும் அல்ஃபாத்திஹா அத்தியாயத்தை) ஓதாமல் தொழுதவரின் தொழுகை குறையுள்ள தொழுகையாகும்; நிறைவு பெறாததாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று அறிவித்தார்கள். அபூஹுரைரா (ரலி) அவர்களிடம் நாங்கள் இமாமுக்குப் பின்னால் தொழுது கொண்டிருக்கிறோம் (அப்போதுமா ஓத வேண்டும்)? என்று கேட்கப்பட்டது. அதற்கு அபூஹுரைரா (ரலி) அவர்கள் (பின்வருமாறு) பதிலளித்தார்கள்: அதை உங்களுடைய மனதில் ஓதிக்கொள்ளுங்கள். ஏனெனில், அல்லாஹ் கூறியதாக அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை(யில் ஓதப்படும் அல்ஃபாத்திஹா அத்தியாயம்) எனக்கும் என் அடியானுக்குமிடையே (துதித்தல், பிரார்த்தித்தல் ஆகிய) இரு பகுதிகளாகப் பிரித்துள்ளேன். என் அடியான் கேட்டது அவனுக்குக் கிடைக்கும். அடியான் அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் (அனைத்துலகின் அதிபதியான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என்று சொன்னால் மிக்க மேலான அல்லாஹ், என் அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான் என்று கூறுவான். அடியான் அர்ரஹ்மானிர் ரஹீம் (அவன் அளவிலா அருளாளன்; நிகரிலா அன்புடையோன்) என்று சொன்னால் மிக்க மேலான அல்லாஹ், என் அடியான் என்னைத் துதித்துவிட்டான் என்று கூறுவான். அடியான் மாலிக்கி யவ்மித்தீன் (தீர்ப்பு நாளின் அதிபதி) என்று சொன்னால், அல்லாஹ், என் அடியான் என்னைக் கண்ணியப்படுத்திவிட்டான் என்று கூறுவான். (நபி (ஸல்) அவர்கள் சில வேளைகளில் என் அடியான் தன் காரியங்களை என்னிடம் ஒப்படைத்துவிட்டான் என்றும் கூறியுள்ளார்கள்.)

மேலும், அடியான் இய்யாக்க நஅபுது வ இய்யாக்க நஸ்தஈன் (உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்) என்று சொன்னால், அல்லாஹ், இது எனக்கும் என் அடியானுக்கும் இடையே உள்ளது. என் அடியானுக்கு அவன் கேட்டது கிடைக்கும் என்று கூறுவான். அடியான் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத் தல்லதீன அன்அம்த்த அலைஹிம், ஃகைரில் மஃக்ளூபி அலைஹிம் வலள் ளால்லீன் (எங்களுக்கு நீ நேரான வழியைக் காட்டுவாயாக. அவ்வழி உன்னுடைய அருளைப் பெற்றவர்களின் வழி. உன்னுடைய கோபத்திற்கு ஆளானவர்கள் வழியுமல்ல; வழிதவறியோரின் வழியுமல்ல) என்று சொன்னால், அல்லாஹ் இது என் அடியானுக்கு உரியது. என் அடியானுக்கு

அவன் கேட்டது கிடைக்கும் என்று கூறுவான்.

நூல் : ஸஹீஹ் முஸ்லிம் **655**

**சூரத்துல் ஃபாத்திஹா ஓதிப்பார்த்தலுக் குறியது.**

அபூசயீத் அல்குத்ரீ(ரலி) அவர்கள் கூறியதாவது: நபித்தோழர்களில் சிலர் ஒரு பயணம் மேற்கொண்டார்கள். அவர்கள் பயணம் செய்து (வழியில்) ஓர் அரபுக்குலத்தார் (தங்கியிருந்த இடத்துக்கு) அருகில் தங்கினார்கள். நபித்தோழர்கள் அக்குலத்தாரிடம் விருந்து கேட்டபோது அவர்களுக்கு விருந்தளிக்க அவர்கள் மறுத்து விட்டனர். அச்சமயம் அக்குலத்தாரின் தலைவனை தேள் கொட்டிவிட்டது. அவனுக்காக அவர்கள் எல்லா முயற்சிகளையும் செய்துபார்த்தனர்; எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை. அப்போது அவர்களில் சிலர், "இதோ! இங்கே நமக்கு அருகில் தங்கியிருக்கும் கூட்டத்தாரிடம் நீங்கள் சென்றால், அவர்களிடம் (இதற்கு மருந்து) ஏதேனும் இருக்கலாம்" என்று கூறினர்.

அவ்வாறே அவர்களும் நபித்தோழர் களிடம் வந்து, "கூட்டத்தாரே! எங்கள் தலைவரைத் தேள் கொட்டிவிட்டது; அவருக்காக அனைத்து முயற்சிகளையும் செய்தோம்; (எதுவுமே) அவருக்குப் பயன் அளிக்கவில்லை. உங்களில் எவரிடமாவது (மருந்து) ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டனர். அப்போது, நபித்தோழர்களில் ஒருவர், "ஆம்! அல்லாஹ்வின் மீதாணையாக! நான் ஓதிப்பார்க்கிறேன்; என்றாலும், அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் உங்களிடம் விருந்து கேட்டு நீங்கள் விருந்து தராததால் எங்களுக்கென்று ஒரு கூலியை நீங்கள் தராமல் ஓதிப்பார்க்க முடியாது" என்றார். அவர்கள் (முப்பது ஆடுகள் கொண்ட) ஓர் ஆட்டு மந்தை அளிப்பதாகப் பேசி ஒப்பந்தம் செய்தனர்.

நபித்தோழர் ஒருவர், தேள் கொட்டப்பட்டவர்மீது 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்...' என்று ஓதி (இலேசாக) உமிழ்ந்தார்.

உடனே பாதிக்கப்பட்டவர். கட்டுகளிலிருந்து அவிழ்த்து விடப்பட்டவரைப் போன்று நடக்க ஆரம்பித்தார். வேதனையின் அறிகுறியே அவரிடம் தென்படவில்லை. பிறகு, அவர்கள் பேசிய கூலியை முழுமையாகக் கொடுத்தார்கள். "இதைப் பங்கு வையுங்கள்" என்று ஒருவர் கேட்டபோது, "நபி (ஸல்) அவர்களிடம் சென்று நடந்ததைக் கூறி, அவர்கள் என்ன கட்டளையிடுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் அவ்வாறு செய்யக் கூடாது" என்று ஓதிப்பார்த்தவர் கூறினார்.

நபி(ஸல்) அவர்களிடம் நபித்தோழர்கள் வந்து நடந்ததைக் கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "அது (அல்ஹம்து அத்தியாயம்) ஓதிப்பார்க்கத் தக்கது என்று உமக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டுவிட்டு, "நீங்கள் செய்தது சரிதான்; அந்த ஆடுகளை உங்களுக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுங்கள்! உங்களுடன் எனக்கும் ஒரு பங்கை ஒதுக்குங்கள்" என்று கூறிவிட்டுச் சிரித்தார்கள்.

நூல்: ஸஹீஹுல் புஹாரி **2276**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

குர்ஆனின் தோற்றுவாய் (எனும் 'அல்ஃபாத்திஹா' அத்தியாயத்தை) ஓதாத வருக்குத் தொழுகையே கிடையாது.

இதை உபாதா பின் அஸ்ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஸஹீஹுல் புஹாரி**756**



# ஹதீஸ்

## எப்படி புரிவது?

- அபூஅக்மல்

### ஹதீஸ் - 4

**தொழுகையை முறிக்கும் மூன்று**

அப்துல்லாஹ் பின் அஸ்ஸாமித் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூதர் அல்கிஃபாரீ (ரலி) அவர்கள், உங்களில் ஒருவர் (திறந்தவெளியில்) தொழ நிற்கும் போது தமக்கு முன்னால் வாகன (ஒட்டக)த்தின் (சேணத்திலுள்ள) சாய்வுக்கட்டை போன்றது இருந்தால் அதுவே அவருக்குத் தடுப்பாக அமைந்துவிடும். சாய்வுக்கட்டை போன்றது இல்லாவிட்டால் கழுதை, பெண் மற்றும் கறுப்புநாய் ஆகியன அவரது தொழுகையை முறித்துவிடும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றார்கள். உடனே நான், அபூதர் (ரலி) அவர்களே! சிவப்பு நிற நாய், மஞ்சள் நிற நாய் ஆகியவற்றை விட்டுவிட்டுக் கறுப்பு நிற நாயை மட்டுமே குறிப்பிடக் காரணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், என் சகோதரரின் புதல்வரே! நீங்கள் என்னிடம் கேட்டதைப் போன்றே நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் கறுப்பு நாய் ஷைத்தான் ஆகும் என்று கூறினார்கள் என்றார்கள்.

(முஸ்லிம் 882)

இந்த ஹதீஸின் கருத்தை கீழ்காணும் ஹதீஃும் கூறுகிறது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(தடுப்பு இல்லாமல் தொழுகின்றவரின்) தொழுகையைப் பெண் (முறித்துவிடுவாள். மேலும்), கழுதை, நாய் ஆகியவை(யும்) முறித்துவிடும். வாகன (ஒட்டக)த்தின் (சேணத்திலுள்ள) சாய்வுக்கட்டை போன்றது அதிலிருந்து பாதுகாத்துவிடும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(முஸ்லிம் 883)

மேற்கண்ட இரண்டு ஹதீஸ்களும் தொழக்கூடிய ஒருவர் தனக்கு முன்னால் தடுப்பு எதுவும் வைக்காமல் தொழுதால் பெண்ணோ அல்லது நாயோ கழுதையோ அவருக்கு முன்னால் கடந்து சென்றால் அவரது தொழுகை முறிந்து விடும் என்ற கருத்தை தெரிவிக்கின்றன. அதாவது இவ்வாறு கடந்து சென்றால் தொழுபவர் தனது தொழுகையை நிறுத்திவிட்டு மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொழ வேண்டும் என்பது கருத்து.

இந்தக் கருத்தை லாஹிரியா வழிமுறையை சேர்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர். ஹன்பலி அறிஞர்கள்,

கருப்பு நாய் குறுக்கே செல்வதால் மட்டும் இவ்வாறு தொழுகை முறியும் என்கின்றனர்.

(நூல்: அல்பிக்ஹுல் இஸ்லாமி வ அதில்லதுஹு )

பொதுவாக தொழக்கூடியவர் தனக்கு முன்னால் சுத்ரா எனும் தடுப்பை வைத்துக் கொள்வது மார்க்கத்தில் காட்டித் தரப்பட்டுள்ள ஒரு வழிமுறையாகும். ஆனால் அவ்வாறு சுத்ரா வைத்தோ அல்லது வைக்காமலோ தொழக்கூடியவருக்கு முன்னால் எதுவும் கடந்து செல்வதால் தொழுபவரின் தொழுகைக்கு பாதிப்பு ஏற்படும் என்று சுத்ரா வைப்பது பற்றி பேசும் ஹதீஸ்களில் சொல்லப்படவில்லை. அத்துடன் இவ்வாறு குறுக்கே செல்வதால் தொழுகை முறியும் என்று புரிவது தவறு என்று உணர்த்தும் ஹதீசும் உண்டு. அது,

மஸ்ரூக் பின் அஜ்தஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஆயிஷா (ரலி) அவர்கள் அருகில் நாயும் கழுதையும் பெண்ணும் (தொழுபவருக்குக் குறுக்கே செல்வது) தொழுகையை முறித்துவிடும் என்பது பற்றி பேசப்பட்டது. அதைக் கேட்ட ஆயிஷா (ரலி) அவர்கள், (பெண்களாகிய) எங்களைக் கழுதைகளுக்கும் நாய்களுக்கும் ஒப்பாக்கிவிட்டீர்களே! அல்லாஹ்வின் மீதாணையாக! நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கும் (அவர்களின்) கிப்லாவுக்குமிடையே கட்டிலில் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருக்க அவர்கள் தொழுது கொண்டிருப்பார்கள். அப்போது எனக்கு ஏதேனும் தேவையேற்பட்டால் நபி(ஸல்) அவர்களுக்கு முன்னால் (எழுந்து) உட்கார்ந்து அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்த விரும்பாமல் கட்டிலின் இரு கால்கள் வழியாக நான் நழுவிச் சென்றுவிடுவேன் என்று கூறினார்கள்.

(புகாரி 514, முஸ்லிம் 887)

இந்த இரு வகை ஹதீஸ்களையும் ஒன்றிணைத்துப் புரியும் விதத்தில் இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கூறும் விளக்கம்:

(மூன்று கடந்து செல்வதால் தொழுகை முறியும் என்று கூறும் ஹதீஸ் விஷயத்தில்) இமாம்கள் மாலிக், அபு ஹனீஃபா, ஷாஃபீ ஆகியோரும் மற்றும் முற்கால, பிற்கால அறிஞர்களில் பலரும் "இம்மூன்றில் ஒன்றோ அல்லது வேறு எதுவுமோ கடந்து செல்வதால் தொழுகை முறியாது" என்று கூறுகிறார்கள். மேலும் தொழுகை முறியும் என்பதின் கருத்து, "இவை கடந்து செல்லும்போது இவற்றில் கவனம் செல்வதால் தொழுகையில் குறைவு ஏற்படும். தொழுகையே செல்லாமல் போய்விடும் என்பது இதன் கருத்து அல்ல" என்றும் இவர்கள் விளக்கமளிக்கிறார்கள். (ஷரஹுன்னவவி அலா ஸஹீஹ் முஸ்லிம்).

ஆக இவ்வாறு புரிவதால் ஹதீஸ்களுக்குள் முரண்பாடில்லாமல் விளங்கலாம்.

**சுத்ரா வைத்தோ அல்லது வைக்காமலோ தொழக்கூடியவருக்கு முன்னால் எதுவும் கடந்து செல்வதால் தொழுபவரின் தொழுகைக்கு பாதிப்பு ஏற்படும் என்று சுத்ரா வைப்பது பற்றி பேசும் ஹதீஸ்களில் சொல்லப்படவில்லை.**

**அத்துடன் இவ்வாறு குறுக்கே செல்வதால் தொழுகை முறியும் என்று புரிவது தவறு**

# شرح السنة ஷரஹ் சுன்னா

மௌலவி பஷீர் ஃபிர்தவ்ஸி, துணை ஆசிரியர்

இமாம் பர்பஹாரி(ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

**நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, இந்த உம்மத்தில் மிகச் சிறந்தவர்கள். அபூபக்கர்(ரழி), உமர்(ரழி), உஸ்மான்(ரழி) ஆகியோர்கள் ஆவர்.**

இவ்வாறுதான் இப்னு உமர்(ரழி) அவர்களின் அறிவிப்பில் காண்கிறோம். இப்னு உமர்(ரழி) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எங்களுக்கு மத்தியில் இருக்கும் போது, அல்லாஹ்வின் தூதருக்கு அடுத்தபடியாக மக்களில் சிறந்தவர்கள் '

**அபூபக்கர்(ரழி),**

**உமர்(ரழி),**

**உஸ்மான்(ரழி)**

ஆகியோர்களாவர் என நாங்கள் கூறிவந்தோம். நபி(ஸல்) அவர்கள் இதனை செவிமடுப்பார்கள். ஆனாலும், அதனை அவர்கள் மறுக்கவில்லை!.

இவர்களுக்குப் பின் மக்களில் சிறந்தவர்கள்..

**அலீ(ரழி),**

**தல்ஹா (ரழி),**

**சுபைர் (ரழி),**

**ஸஅத்(ரழி),**

**ஸஈத்(ரழி),**

**அப்துர்ரஹ்மான் பின் அவுஃப்(ரழி),**

**அபூஉபைதாபின் ஜர்ராஹ்(ரழி)**

ஆகியோர்கள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் கிலாஃபத்திற்கு பொருத்தமானவர்களாவர்.

**விளக்கம் :**

தலைமுறையில் சிறந்தவர்கள் நபி(ஸல்) அவர்களின் காலத்தவர்கள் ஆவார்கள். அதன் பின்னர் அவர்களுக்கு அடுத்து வரக்கூடியவர்கள். அதன் பின்னர் அவர்களுக்கு அடுத்து வரக்கூடியவர்கள் ஆவார்கள். இதில் முதன்மையானவர்கள் ஸஹாபாக்கள் ஆவார்கள். அவர்களில் சிறந்தவர் அபூபக்கர்(ரழி) அவர்கள் ஆவார்கள் அவர் தான் அல்லாஹ்வின் தூதர் அவர்களை முதலாவதாக நம்பிக்கைக்கொண்டார் அவருக்கு உதவியாக இருந்தார், இன்னும் அவரை பாதுகாத்தார் அவருக்கு உதவுவதற்காக தனது செல்வத்தை செலவழித்தார் அல்லாஹ்வின் தூதரின் மரணம் வரை அவருடனேயே இருந்தார் அல்லாஹ்வின் தூதரின் மரணத்திற்கு பின்னர் கிலாஃபத் பொறுப்பை ஏற்று சிறப்பான முறையில் அதனை நிறைவேற்றினார். அவர் மூலம் அல்லாஹ் இந்த மார்க்கத்தை உறுதிபடுத்தினான் முர்த்ததுகளுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் இவர் மூலம் பதிலடிகொடுத்தான் நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்கு பின்னர் இஸ்லாமை வலுப்படுத்தினார் அண்ணாரது மரணத்திற்கு பின்னர்

நபியவர்களுடனே அடக்கம் செய்யப்பட்டார்கள் உயிருடன் இருக்கும்போதும் மண்ணறையிலும் அல்லாஹ்வின் தூதரின் தோழராகவே இருந்தார் இவரே அல்லாஹ்வின் தூதர் ஹிஜ்ரத் செய்யும் போது சவ்ரு குகையில் தஞ்சம் புகுந்த நேரத்தில் அவருடன் தோழராக இருந்தார்கள் இதைப்பற்றித் தான் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்

குகையில் இருவரில் ஒருவராக இருந்த போது, (நம் தூதர்) தம் தோழரிடம், "கவலைப்படாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்" என்று கூறினார். அப்போது அவர் மீது அல்லாஹ் தன் சாந்தியை இறக்கி வைத்தான்; மேலும் நீங்கள் பார்க்க முடியாப் படைகளைக் கொண்டு அவரைப் பலப்படுத்தினான்; நிராகரிப்போரின் வாக்கைக் கீழாக்கினான்; ஏனெனில் அல்லாஹ்வின் வாக்குத்தான் (எப்போதும்) மேலோங்கும் அல்லாஹ் மிகைத்தவன், ஞானமிக்கவன். (அல்குர்ஆன் *9:40*)

இந்த உம்மத்தில் மிகவும் சிறந்தவர் இவர் தான் இவருக்கு அடுத்ததாக இரண்டாம் கலீஃபா உமர் அவருக்குப் பின் உஸ்மான் அதன் பின்னர் அலீ இவர்கள் தான் நேர்வழிபெற்ற நான்கு கலீஃபாக்கள் இவர்களுக்கு பின்னர் சொர்க்கத்திற்கு நன்மாறாயம் கூறப்பட்டவர்களில் மீதமுள்ளவர்கள் சுபைர், தல்ஹா, அப்துர் ரஹ்மான், அபூஉபைதா, ஸஅத் பின் அபீவக்காஸ், ஸஈது பின் ஸைத் ஆகியோர்கள் ஆவார்கள்.

நூல்: திர்மிதி **3748**

இவர்கள் அனைவரும் கிலாஃபத்திற்கு தகுதியானவர்கள் ஆவார்கள் என்றாலும் நான்கு கலீஃபாக்களைத் தவிர வேறு யாரும் ஆட்சிப்பொறுப்பை ஏற்கவில்லை⊙

## யூதர்கள் குறித்து குர்ஆன்

**"வேதம் உடையவர்களே! அல்லாஹ்வின் மீதும், எங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின்மீதும், எங்களுக்கு முன்னர் இறக்கப்பட்டவை மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பதைத் தவிர, வேறு எதற்காகவும் நீங்கள் எங்களைப் பழிக்கவில்லை; நிச்சயமாக, உங்களில் பெரும்பாலோர் ஃபாஸிக்கு (பாவி)களாக இருக்கின்றீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.**

**"அல்லாஹ்விடமிருந்து இதைவிடக் கெட்ட பிரதிபலனை அடைந்தவர்களைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அவர்கள் யாரெனில்) எவரை அல்லாஹ் சபித்து, இன்னும் அவர்கள் மீது கோபமுங்கொண்டு, அவர்களில் சிலரைக் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் ஆக்கினானோ அவர்களும், ஷைத்தானை வழிப்பட்டவர்களும் தான் - அவர்கள்தாம் மிகவும் தாழ்ந்த நிலையினர்; நேரான வழியிலிருந்தும் தவறியவர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.**

**(முஃமின்களே!) இவர்கள் உங்களிடம் வந்தால் "நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம்!" என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் குஃப்ருடன் (நிராகரிப்புடன்)தான் வந்தார்கள்; இன்னும் அதனுடனேயே வெளியேறினார்கள், (நிச்சயமாக) அவர்கள் மறைத்து வைத்திருப்பதை அல்லாஹ் மிகவும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.**

**அவர்களில் பெரும்பாலோர் பாவத்திலும், அக்கிரமத்திலும் விலக்கப்பட்ட பொருள்களை உண்பதிலும் விரைந்து செயல்படுவதை (நபியே!) நீர் காண்பீர். அவர்கள் செய்வதெல்லாம் தீமையேதாம்.**

**(அல்குர்ஆன் 5 : 59-62)**



# லியோபால்ட் கண்ட இஸ்லாம்

செ.தாஹிர் சைஃபுத்தீன் - பாம்பன்

ஐரோப்பிய உலகம் இஸ்லாம் குறித்து புனைந்து வைத்திருந்த பொய்களை கட்டுடைத்த அறிஞர்களில் முதன்மையானவர் லியோபால்ட் வைஸ்.

ஆயிரத்து ஓர் இரவு, சிந்துபாத் கதைகள் போன்றவற்றை முன்னிறுத்தி இஸ்லாம் என்றாலே மூடத்தனமும் மௌட்டீகமும் தான் என ஐரோப்பிய அறிஞர்கள் உலகை நம்ப வைத்திருந்த காலகட்டம்.

ஆனால், உண்மை தான் என்ன என்பதை நேரில் தெரிந்து கொள்ள அரபு மண்ணிற்கு புறப்பட்டார் லியோபால்ட்.

1910 முதல் 1930 வரை இருபதாண்டு காலம் அரபு மண்ணில் அவர் கால்படாத இடம் இல்லை.

சவூதி, எகிப்து, மக்ரிப் நாடுகளான மொரோக்கோ, துனூசியா, அல்ஜீரியா, லிபியா மற்றும் இன்னும் பிற நாடுகளில் காடு, மலை, பாலை என சுற்றினார்.

கற்றதற்கும் காண்பதற்கும் பெரும் வித்தியாசம் இருப்பதை உணர்ந்து அவற்றை - உண்மைகளை ஆவணப்படுத்தும் முயற்சியில் இறங்கினார்.

உண்மையின் உரைகல்லாக Road to Mekka வை எழுதி வெளியிட்டார்.

இறுதியில் முஹம்மது அஸத் ஆக தன்னை சத்தியத்தில் இணைத்துக் கொண்டார்.

அவர், 'நான் பெரும் இஸ்லாமிய அறிஞர்களான ஸனூசிகள் உட்பட மேதைகளையும் உமர் முக்தார் போன்ற தலைவர்களையும் சந்தித்தேன். அவர்களுடன் பயணித்தேன். ஆனால் அவர்கள் யாரும் எனக்கு இஸ்லாம் குறித்து அறிமுகப்படுத்தவில்லை. மாறாக, 'பதுக்கள்' எனும் அரபு பழங்குடியினர் தான் எனக்கு இஸ்லாத்தை சொல்லித் தந்தார்கள்' என்று குறிப்பிடுகிறார்.

போலந்து நாட்டில் வைதீக யூத குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அறிஞரான லியோபால்ட், ஸஹீஹுல் புகாரியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மேலும் அதற்கு விரிவுரையும் எழுதினார்.

யாரை வைத்து தன் மார்க்கத்தை மேலோங்கிட செய்ய வேண்டும் என்பதை நுட்பமாக அறிந்தவன் அல்லாஹ்.

பெரும் அறிஞரான லியோபால்ட், முஹம்மது அஸத் ஆக மாறுவதற்கு காரணம் அறிஞர்கள் அல்ல பாமர மக்களான பதுக்கள் தான் என அறியும் போது அல்லாஹ்வின் வல்லமைக்கு முன் நாமெல்லாம் ஒன்றுமே இல்லை என்பது தெளிவாகிறது.

(காயல்பட்டினம், பெரியவர் அபுல் ஹஸன் கலாமி Road to Mekka நூலை 'எனது பயணம்' என தமிழாக்கம் செய்துள்ளார்) ◉

# நோய்... போயே போச்சு!

செ.தாஹிர் சைஃபுத்தீன்
பாம்பன்

இர்ஃபானை சந்திக்க அவன் நண்பன் பாசித் வந்தான்.

இர்ஃபான் எப்பொழுதும் போல கலகலப்பாக இல்லை.

பாசித் பேச்சுக் கொடுத்தான். இர்ஃபான் மிக இறுக்கமாக பேசினான்.

ஏண்டா... இர்ஃபான், இப்படி இருக்கே... விளையாடவும் வர்ரதில்லை, தொழுகைக்கும் வர்ரதில்லை . . .

ஆமாண்டா... என்னத்த வாழ்க்கை? எங்க பாரு நோய். கொரானா. மாஸ்க், சமூக இடைவெளி, ஸ்கூல் இல்லை, எங்க பாரு அடிக்கடி மௌத்... எங்க சொந்தக்காரங்க இரண்டு பேர் மௌத்...

அதுதான் எனக்கும் ஒரே பயமாக இருக்கு... என ஒரே மூச்சில் கூறி முடித்தான் இர்ஃபான்.

இவ்வளவு தான் உன் பிரச்சினையா? அடப்போடா, இதுக்கு போயி ஏண்டா உனக்கு விரக்தி? என்று கேட்டான் பாசித்.

அப்ப... கவலைப்படாம எப்படி இருக்க முடியும்? என்றான் இர்ஃபான்.

குர்ஆனை தெளிவாக புரிந்து கொண்டால் கவலைக்கு வேலையே இல்லை என்றான் பாசித்.

'அல்லாஹ் விதித்ததை தவிர வேறொன்றும் எங்களை அணுகாது' என்று குர்ஆன் நமக்கு கூறுகிறது.

முஃமினுக்கு ஏற்படும் துன்பம் அனைத்தும் அவனுக்கு அருளாக மாறிவிடும் என்றார்கள் நம் அண்ணல் நபி. ஒரே நிபந்தனை, அவன் பொறுமை காக்க வேண்டும்.

முஃமின் காலில் முள்குத்துவது கூட அவனுக்கு பாவமன்னிப்பை பெற்றுத் தருவதாக நம் நபி சொல்லி இருக்காங்க.

அப்படியா நம்ம நபி சொன்னாங்க



என்று ஆச்சரியமாக கேட்டான் இர்ஃபான்.

ஆமாண்டா இர்ஃபான், அதுமட்டுமல்லாமல், கொரானா என்பது ஒரு தொற்று நோயாகும். தொற்று நோய் ஏற்பட்டு அதில் இறந்து போன முஃமின் உயிர் தியாகி எனும் ஷஹீத் அந்தஸ்து பெறுகிறார். ஆனால், அவர் உள்ளத்தில் ஷஹீத் ஆக வேண்டும் என்ற நிய்யத்தும் நோயின் போது பொறுமையும் இருந்தால் நிச்சயமாக அந்த பாக்கியம் கிடைக்கும் என்றான் பாசித்.

பாசித் சொல்ல சொல்ல இர்ஃபான் மிக ஆர்வமாக கேட்டது மட்டுமல்லாமல், அவன் முகத்தில் புது தெம்பும் தெளிச்சியும் ஏற்பட்டது.

நம்ம மார்க்கமே பெரிய அருள் தான். நாம்தான் புரிந்து கொள்ளாமல் பல நேரங்களில் குழம்பி விடுகிறோம். அப்படித்தான் மூன்று நாட்களாக நானும் அப்செட் ஆயிட்டேன், நீ மட்டும் சரியான நேரத்தில் எனக்கு புரிய வைக்க வில்லை என்றால் எனக்கு தலையே வெடித்து விடும் போலிருந்தது, பாசித் உனக்கு ரொம்ப நன்றி டா, ஜஸாக்கல்லாஹ் டா.

நீ எங்க வீட்டுக்கு ஒரு எட்டு வாயேன். எங்க அம்மா குழப்பமாக இருக்காங்க, நீ வந்து ஆறுதல் சொல்லுடா என்றான் இர்ஃபான்.⦿




# வெற்றி பெற்றோர் யார்?-2

ஃபாத்திமா ஆலிமா மஹ்மூதிய்யா, சுரண்டை

## 2. அல்லாஹ்வுக்கு இணைவைக்காதோர் வெற்றிபெற்றோர்!

மக்களை பெற்ற மகராசன்! செல்வம் பெற்ற சீமான்! பலம் பெற்ற பயில்வான்! கற்றறிந்த மேதை! கொடுத்துதவும் கொடையாளன்! உலகம் போற்றும் உத்தமன்! இவற்றில் யாராக இருந்தாலும், தன் இறைவனுக்கு இணைவைத்தால் அவன் செல்லுமிடம் நரகமே! ஆம்! அவன் செல்லுமிடம் நரகமே!

எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை. (அல்குர்ஆன் 5:72)

மண்ணையும், விண்ணையும் படைத்து அதில் உள்ள அனைத்தையும் மனிதனின் தேவைக்கு படைத்த இறைவன் அவனை வணங்குவதற்காகவே படைத்துள்ளான்.

இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.

(அல்குர்ஆன் 51:56)

மேலும் அல்லாஹ் கூறுகிறான், மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள்; அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். (அல்குர்ஆன் 4:36)

அல்லாஹ் தன் திருமறையில் அதிகமான இடங்களில் அவனை மட்டுமே வணங்கவேண்டும் அவனுக்கு எதையும் இணைவைக்க வேண்டாம் என்றும் அதனை மீறிய சமுதாயத்திற்கு ஏற்பட்ட அழிவைப் பற்றியும், அவன் கட்டளையை மீறும் மக்களுக்கு ஏற்படும் தண்டனைகள் குறித்தும் எச்சரிக்கை செய்து கூறுகிறான்.

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நபிமார்களை வழிகாட்டியாக அனுப்பியதெல்லாம் அவனுக்கு யாதொன்றையும் இணைவைக்கக் கூடாது என்று கூறி நன்மையை ஏவி தீமையை தடுப்பதற்குத்தான். இவ்வுலகில் அவர்களும் அவன் இட்ட கட்டளைப்படி வாழ்ந்து மக்களுக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், எவன் ஒருவன் அல்லாஹ்விற்கு இணைவைத்த நிலையில் மரணித்துவிட்டானோ அவன் நரகம் புகுவான்.

நூல் : புஹாரி

ஆனால் நம்மில் சிலர் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தனக்கு ஒரு துன்பம் நேர்ந்தாலோ, அல்லது பொருட்சேதம் உயிர்சேதம், நோய், கஷ்டம் என்று இதில் ஏதாவது ஒரு சிறு சோதனை ஏற்பட்டால் அதற்கான

நிவாரணம் எங்கிருக்கிறது என்று தேடி அலைகின்றனர். அது எதுவானாலும் செய்ய துணிகின்றனர். இதன் விளைவு இணைவைப்பாக மாறிவிடுகிறது. இதனால் நேர்ச்சைகள் அறுத்து பலியிடுதல், வணக்க வழிபாடுகள் போன்ற அனைத்தும் மற்றவர்களுக்கு செய்யப்படுகிறது. அல்லாஹ்வுடைய சிஃபாத்துகள் அடுத்தவருக்கு உரியதாக்கி இறுதியில் நரகத்திற்கு போய் சேரும் அளவிற்கு வழிகேட்டில் விழுகின்றனர்.

எந்த ஒரு துன்பமானாலும் அல்லாஹ்வைத் தவிர யாரும் நீக்க முடியாது. (அல்குர்ஆன் 6:17)

அல்லாஹ் கூறுகிறான்,

மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது; இன்னும், அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது; தேடுவோனும், தேடப்படுவோனும் பலஹீனர்களே.

(அல்குர்ஆன் 22: 73)

**இந்த வசனத்தை நாம் என்றைக்காவது சிந்தித்தோமா? இவ்விறை வசனத்தில் அல்லாஹ் ஒரு ஈ நம் கண்களுக்கு ஓர் உதாரணமாக கூறுகின்றான் ஏன்?**

நமக்கு ஈ ஓர் சாதாரணமான அற்பமான பூச்சியாகத்தான் நம் கண்களுக்கு தோன்றும். ஆனால் அதில் மறைந்துள்ள அறிவியல் அதிசயங்களை அறிந்ததில்லை.

ரஷ்யாவை சேர்ந்த பிரபல விலங்கியல் ஆய்வாளர் ஈ யைப் பற்றி ஆராய்ந்து பல அறிவியல் தகவல்களை கூறியுள்ளார். இதோ நம் சிந்தனைக்கு சில.

ஈக்களில் **30000** வகை உள்ளன. அதில் இரத்த நரம்புகள் நூற்றுக் கணக்கில் ஓடிக் கொண்டிருக்கும்.

**நொடிக்கு பல தடவை இறக்கையை அடிக்கும் சக்தியுள்ளது. மணிக்கு 5 கி.மீ வேகத்தில் பறக்கும் சக்தியுள்ளது.**

கண்களில் **4000** லென்சுகள் வரை இருக்கும். மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை விட பன்மடங்கு நோய் எதிர்ப்பு சக்தி மிக அதிகமாக உள்ளது.

திடப்பொருளை தன் உமிழ் நீரால் மெல்லிய உறிஞ்சும் குழாய் வழியாக உறிஞ்சி திரவமாக மாற்றி தன் வயிற்றிற்குள் செலுத்திவிடும் ஆற்றல் உடையது.

இதைத்தான் அல்லாஹ் மேற்கண்ட வசனத்தில் ஈயின் வாயில் ஒரு பொருளைக்கூட பிடுங்க முடியாது என்று கூறுகின்றான்.

நாம் அற்பமாக கருதும் ஈயிடமே இவ்வளவு தன்மைகளை வைத்து படைத்துள்ள படைப்பாளன் அல்லாஹ்வின் ஆற்றல் எத்தகையது என்று நாமெல்லாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம் அல்லாஹ்வின் நல்லடியார்களே.

நம்மில் பலர் நம் தேவையை பூர்த்தி செய்யும் பூதமாக, குறை தீர்க்கும் கோமானாக, நலம்காக்கும் நாயகர்களாக, குடும்பத்தின் குலதெய்வமாக படைத்த ஓர் இறைவனை மறந்து அவன் படைத்த அடியார்களான அவ்லியாக்கள், நாதாக்கள் என மண்டியிட்டு அவர்களிடம் கையேந்துகின்றார்கள்.

அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண்டும் அவனுக்கு இணைவைக்கக் கூடாது என்று நாம் கூறினால், எங்களுக்கு அல்லாஹ்வும் வேண்டும் அவ்லியாக்களும் வேண்டும் என்று கூறுகின்றனர். மேலும்

அல்லாஹ்விற்கு இணையாக அவ்லியாக்கள், நாதாக்கள் என்று நேர்ச்சை, கந்தூரி, தீப ஆராதனைகள், வானவேடிக்கைகள், இன்னிசைக் கச்சேரிகள், மேல தாளங்கள் யானையில் கொடி, சந்தனக்கூடு உருஸ் என்று இறைவனுக்கு, இறைகூற்றுக்கும் மாற்றமாக இஸ்லாம் அனுமதிக்காத அனாச்சாரங்கள், கேளி கூத்துக்களில் ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டு வீழ்ந்து கிடக்கின்றார்கள்.

இதைச் செய்ய கட்டளையிட்டது யார்? கற்றுத்தந்தது யார்? அல்லாஹ்வா? அல்லாஹ்வுடைய தூதரா? இதை என்றாவது சிந்தித்ததுண்டா?

அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதரும் நமக்கு எதை கற்றுத்தந்தார்களோ அதுதான் வணக்க வழிபாடு அது அல்லாதது வழிகேடு!

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்,

நான் ஒன்றை செய்யுமாறு கட்டளையிட்டால் அதை உங்களால் முடிந்த அளவிற்கு செய்யுங்கள். ஒன்றை செய்ய வேண்டாம் என தடுத்தால் அதை முற்றிலும் செய்யாமல் விட்டுவடுங்கள்.

(நூல் : புஹாரி)

அவ்லியாக்களிடம் செல்லும் நம்மில் சிலர் இதனை என்றைக்காவது சிந்தித்திருக்கின்றோமா? நம் மறுமை வாழ்வை சீரழித்துக் கொள்ள விரும்புவோமா? அல்லது நாம் தப்பித்தோம் நாம் இணைவைக்கவில்லை. நம் குடும்பத்தில் உள்ளவர்கள் நம் சொந்த பந்தங்கள் என்று நம்மில் எத்தனைபேர் பெருமூச்சு விட்டிருக்கிறோம் இதனை சிந்தித்து நம் குடும்ப உறவுகளுக்கும் நம் அக்கம் பக்கத்தினருக்கும் சொல்வது நம் கடமையில்லையா?

வழியிலே கிடக்கும் ஒரு கண்ணாடி குத்தி காலினை காயப்படுத்தி இரத்தம் சொட்டுவதை காண நம் மனம் சகிக்காதே! நம் உறவுகள் நரகில் விழுவதைக் காணப் பொறுக்குமா? சிந்தித்து பார்க்க வேண்டும் அல்லாஹ்வின் நல்லடியார்களே!

நபி(ஸல்) கூறினார்கள்,

“ செருப்பின் வார் அறுந்தாலும் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள் என்று, நாமும் ஒவ்வொரு நேர தொழுகையிலும் ஒரு நாளைக்கு சுமார் குறைந்தது **20** முறையாவது இய்யாக நஹ்புது வ இய்யாக நஸ்தயீன் அல்லாஹ்வே உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவியும் தேடுகிறோம் என்று கூறுகின்றோம். மேலும் ஒவ்வொரு நேர தொழுகைக்குப் பின் கேட்கும் துஆவிலும் யா அல்லாஹ் நீ கொடுத்ததை தடுப்பவர் எவருமில்லை, நீ தடுப்பதை கொடுப்பவர் எவருமில்லை. செல்வந்தனின் செல்வம் உன்னிலிருந்து கிடைக்கும் தண்டனையிலிருந்து காத்துக் கொள்ளப் பயனளிக்காது.

(நூல்: புகாரி)

**எந்த ஒரு தேவையாக இருந்தாலும் படைத்தவனிடம் தான் கேட்க வேண்டும். படைப்புகளிடம் இல்லை. நம் உயிர்போகும் நிலை வந்தாலும் ஓர் இறைக்கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும்.**

இவ்வாறு நாம் ஒவ்வொரு நாளும் இறைவனிடம் பிரார்த்தித்துவிட்டு இணைவைப்பின் பின் செல்வதா? சிந்திக்க வேண்டும்! எந்த ஒரு தேவையாக இருந்தாலும் படைத்தவனிடம் தான் கேட்க வேண்டும் படைப்புகளிடம் இல்லை. நம் உயிர்போகும் நிலை வந்தாலும் ஓர் இறைக்கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும்.◉

# கேள்வி - பதில்

**கேள்வி: அல்குர்ஆனின் 3:26, 27 வசனத்தில், நீர் சொர்க்கத்தில் நுழைவீராக! என்று அவருக்கு கூறப்பட்டது" என்று உள்ளது.**

**மறுமை நாளில் மக்களை எழுப்பி விசாரணை செய்யப்பட்ட பின்னர்தானே சொர்க்கம், நரகம் செல்வது நடைபெறும்! அவ்வாறிருக்க இந்த வசனத்தில் ஏன் இவ்வாறு கூறப்படுகிறது?**

**அ.காஜா நஜிமுத்தீன்,**

8வது தெரு, ஏர்வாடி, நெல்லை.

**பதில்:** பொதுவாக மறுமை நாளில் கேள்வி கணக்கு முடிந்த பிறகுதான் மனிதர்கள் சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ செல்ல முடியும். இது அநேக திருக்குர்ஆன் வசனங்களிலும் ஹதீஸ்களிலும் சொல்லப்பட்டுள்ள விஷயம்தான்! ஆனாலும் அல்லாஹ்வின் பாதையில் கொலை செய்யப்பட்டு மரணமடைந்தவர்களுக்கு மட்டும் தனிச்சிறப்பு உண்டு. அதாவது அவர்களின் உயிர்கள் பறவைகளுக்குள் செலுத்தப்பட்டு சொர்க்கத்தில் வசித்து வருகின்றன.

**இது குறித்த ஹதீஸ்**

மஸ்ரூக் பின் அல்அஜ்தஉ(ரஹ்) அவர்கள் கூறியதாவது: "நாங்கள் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரலி) அவர்களிடம், "(நபியே!) அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டோரை இறந்தோர் என நீர் எண்ண வேண்டாம். மாறாக, (அவர்கள்) உயிருடன் உள்ளனர்; தம் இறைவனிடம் (நெருக்கமாக) உள்ளனர்; உணவளிக்கப் பெறுகின்றனர்" *(3:169)* எனும் இந்த இறைவசனத்தைப் பற்றிக் கேட்டோம். அதற்கு அவர்கள் கூறினார்கள்: தெரிந்து கொள்க. இந்த வசனம் குறித்து முன்பே நாங்கள் (நபியவர்களிடம்) கேட்டுவிட்டோம்.

அப்போது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்களின் உயிர்கள் பச்சை நிறப் பறவைகளின் வயிறுகளில் (செலுத்தப்பட்டு) இருக்கும். அவற்றுக்கென இறைஅரியணையின் (அர்ஷின்) கீழ் மாட்டப்பட்டுள்ள கண்ணாடிக் கூண்டுகள் இருக்கும். அவை சொர்க்கத்தில் விரும்பியவாறு உண்டு களித்துவிட்டுப் பின்பு அந்தக் கூண்டுக்குள் வந்து அடையும்.

அப்போது அவர்களின் இறைவன் அவர்களிடம் ஒரு முறை தோன்றி, "நீங்கள் எதையேனும் ஆசைப்படுகிறீர்களா?" என்று கேட்பான். அதற்கு அவர்கள், "நாங்கள் ஆசைப்படுவதற்கு என்ன உள்ளது? நாங்கள்தாம் சொர்க்கத்தில் விரும்பியவாறு உண்டு களித்துக் கொண்டிருக்கிறோமே!" என்று கூறுவர்.

இவ்வாறே மூன்று முறை (கேள்வியும் பதிலும்) நடைபெறுகிறது. எதையேனும் கேட்காமல் நாம் விடப்படமாட்டோம் என்பதை அவர்கள் காணும்போது, "இறைவா! எங்கள் உயிர்களை எங்கள் உடல்களுக்குள் திரும்பவும் செலுத்துவாயாக! நாங்கள் உனது பாதையில் மீண்டும் ஒருமுறை கொல்லப்படவேண்டும்" என்று கூறுவர். அவர்களுக்கு (இதைத் தவிர) வேறெந்தத்

தேவையும் இல்லையென்பதை இறைவன் காணும்போது, அவர்கள் (அதே நிலையில்) விடப்படுவார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 3834.

இந்த ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளபடி அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்கள் மரணமடைந்தும் பறவையின் உடல் வாயிலாக சொர்க்கத்தில் வாழும் வாய்ப்பை பெறுகிறார்கள் என்பது தெரிகிறது.

தாங்கள் குறிப்பிடும் திருக்குர்ஆனின் **36:26,27** வசனங்களில் கூறப்படும் நல்ல மனிதர் அக்காலத்தில் அனுப்பப்பட்டிருந்த இறைத்தூதர்களின் அழைப்பை ஏற்க வேண்டும் என்று தனது சமுதாயத்தவரிடம் பிரச்சாரம் செய்தார். அதனால் கொலை செய்யப்பட்டு மரணமடைந்ததும் சொர்க்கம் செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

அவர் கொலை செய்யப்பட்டு மரணமடைந்தார் என்ற தகவல் இப்னு கஸீர் உள்ளிட்ட பல்வேறு திருக்குர்ஆன் விரிவுரைகளில் கூறப்பட்டுள்ளது.

**கேள்வி:** நபி(ஸல்) அவர்கள் காலத்தில் கொள்ளை நோய் வந்த போது, இருப்பவர்கள் தங்கள் இடங்களில் இருந்து கொள்ளுங்கள். வெளியே இருப்பவர்கள் நோய் உள்ள இடங்களுக்கு செல்ல வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். ஆனால் அந்த நேரத்தில் தொழுகைகளில் மாற்றம் செய்யவில்லை. தற்போது கொரானா காலத்தில் தொழுகைகளில் முகமுடி அணிந்து, சொல்கின்ற இடைவெளியில் வரிசையில் நின்று தொழுங்கள் என்ற நடைமுறை ஒத்துக்கொள்ளத் தக்கதா? ஷைத்தான் இடைவெளியில் புகுந்துவிடுவானே? விளக்கம் தரவும்!

அ.காஜா நஜிமுத்தீன்,
8வது தெரு, ஏர்வாடி, நெல்லை.

**பதில்:** முதலில் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். நபி(ஸல்) அவர்கள் காலத்தில் கொள்ளை நோய் ஏற்பட்டதாக ஹதீஸில் சொல்லப்படவில்லை. ஆனால் கொள்ளை நோய் ஏற்பட்டால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டுதலை நபி(ஸல்) அவர்கள் வழங்கியிருந்தார்கள். அதாவது, ஒரு பகுதியில் கொள்ளை நோய் ஏற்பட்டிருப்பதை நீங்கள் செவியுற்றால் அங்கு நீங்கள் செல்லாதீர்கள். நீங்கள் இருக்கும் பகுதியில் அது ஏற்பட்டால் அங்கிருந்து வெளியேறாதீர்கள்" என்று கூறினார்கள். (புஹாரி **5728**)

அடுத்து நீங்கள் கேள்வியில் குறிப்பிட்டது போன்று ஜமாஅத்தாக தொழும்போது நேராகவும் நெருக்கமாகவும் நிற்க வேண்டும் என்பது சரியே!

தொழுகையில் வரிசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் வரிசையை ஒழுங்குபடுத்துவது தொழுகையை அழகுறச் செய்வதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி **722**).

மேலும் வரிசைகளை நேராக்குங்கள்! நெருக்கமாக நில்லுங்கள்! என்றும் கூறினார்கள். (புகாரி **719**)

இதுபோன்ற ஆதாரங்களின் படி ஜமாஅத்தாக தொழும்போது வரிசையில் நெருக்கமாக நிற்க வேண்டும் என்பது தெளிவான விஷயம்.

ஆனாலும் நிர்பந்த சூழ்நிலையில், தொழுகைக்குள் செய்தே ஆக வேண்டிய காரியங்களை கூட விடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, தொழுகையில் ஆரம்பத்தில் நிலையில் நிற்பது ஒரு ஃபர்ளு (கடமையான காரியம்) இருந்தாலும் நிற்க இயலாத சூழ்நிலையில் நிற்காமல் தரையில்

உட்கார்ந்து தொழலாம். இதுபோல் வேறு சில விசயங்களையும் சொல்லலாம்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவர் இருமினாலோ தும்மினாலோ அருகிலிருப்பவருக்கும் தொற்ற வாய்ப்பிருக்கிறது என்று மருத்துவ அறிஞர்கள் கூறுகிறார்கள். அதனால் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார்கள்.

மருத்துவ அறிஞர்களின் இந்த வழிகாட்டுதல் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனால் தொழுகை வரிசையிலும் இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொழுகைக்கு உள்ளே உள்ள ஃபர்ளான காரியத்தைக்கூட சூழ்நிலை காரணமாக விட்டுவிட அனுமதியிருப்பது போல சூழ்நிலை காரணமாக இந்த இடைவெளியும் அனுமதி என்ற நிலை ஏற்படுகிறது.

ஆனால் தொழுகை வரிசையில் இடைவெளியை கடைப்பிடித்துவிட்டு மற்ற நிலைகளில் அதை பேணாமலிருப்பது முரண்பாடாக உள்ளது.

**கேள்வி:** *கிளி உள்ளிட்ட பறவைகளை கூண்டில் அடைத்து வைத்து வளர்ப்பது ஆகுமானதா?*

**அஸாருத்தீன்,**

வில்லிவாக்கம், சென்னை.

**பதில்:** கிளி, குருவிகள் உள்ளிட்ட பறவைகளை கூண்டில் அடைத்தோ, அடைக்காமலோ வளர்ப்பது ஆகுமானதாகும். அடைத்து வைப்பதன் மூலமாக பறவையின் சுதந்திரத்தை பறித்ததாக ஆகும் என்ற கருத்திலேயே கூண்டில் அடைப்பது பற்றி குறிப்பிட்டிருக்கின்றீர்கள். கூண்டுக்குள் அடைத்து வளர்த்தாலும் அவற்றுக்குத் தேவையான உணவு, நீர் உள்ளிட்டவற்றை சரியான முறையில் கொடுத்து வந்தால் தவறாக ஆகாது.

அனஸ்(ரலி) அறிவித்தார்கள்,

நபி(ஸல்) அவர்கள் மக்களிலேயே மிகவும் நற்குணமுடையவராக விளங்கினார்கள். எனக்கு 'அபூ உமைர்' என்றழைக்கப்பட்ட ஒரு தம்பி இருந்தார்கள். அப்போது அவர் பால்குடி மறக்கவைக்கப்பட்ட பருவத்தில் இருந்தார் என்றே எண்ணுகிறேன். நபி(ஸல்) அவர்கள் (எம் விட்டிற்கு வந்தால்), 'அபூ உமைரே! உன் சின்னக்குருவி என்ன செய்கிறது? என்று கேட்பார்கள். அவன் அப்பறவையுடன் விளையாடிக் கொண்டிருப்பான். ஸஹீஹ் புகாரி : 6203

இந்த ஹதீஸின் படி ஒரு சிறுவர் குருவியை வைத்து விளையாடியதை நபி(ஸல்) அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். இந்த ஹதீஸில் கூண்டில் வைத்து வளர்த்தார்களா? இல்லையா? என்பது தெளிவாகக் கூறப்படவில்லை.

கூண்டில் வைத்திருக்காவிட்டால் அது பறந்து சென்றுவிடாமல் இருப்பதற்காக அதன் இறக்கைகளை துண்டித்து வைத்திருக்க வேண்டும். அதன் இறக்கைகளை துண்டித்து அதை பறக்கவிடாமல் தடுப்பதும் அதன் சுதந்திரத்தை பறிப்பதாகத்தான் ஆகும்.

இதன் மூலம், பறவையின் இறக்கையை அது பறந்துவிடாமல் இருப்பதற்காக துண்டித்து வைத்திருப்பதும் கூண்டில் அடைத்து வைத்திருப்பதும் ஆகுமானது என்பது புலனாகிறது. அல்லாஹ் நன்கறிந்தவன்.⦿



# ஹதீஸ்கள் தொகுக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட வரலாறு – 2

மௌலவி யூசுஃப் ஃபைஸி
இஸ்லாமிய அழைப்பாளர்

சென்ற இதழில் நபி(ஸல்) அவர்களின் சுன்னாக்களின் பங்குகளைப் பற்றி பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இன்னும் சில சுன்னாக்கள் இருக்கிறது. அவற்றையும் பார்த்துவிட்டு மற்ற பகுதிகளுக்கு செல்வோம்.

**நபி(ஸல்) அவர்களின் செயல்கள் சார்ந்த சுன்னா**

இது நபி(ஸல்) அவர்களின் இபாதத் ரீதியான செயல்களை குறிக்கும். வழக்கமான செயல்களை இது குறிக்காது. உதாரணமாக நபி(ஸல்) அவர்களின் தொழுகை, உளூ, ஹஜ், திருடியவனின் கைகளை வெட்டுதல், போன்றவற்றை இதற்கு உதாரணமாக சொல்லலாம்.

**நபி(ஸல்) அவர்களின் சொல் சார்ந்த சுன்னா**

இது நபி (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொன்ன செய்திகளை குறிக்கும். உதாரணமாக

எண்ணங்களைக் கொண்டே செயல்கள் அமையும். நூல் : புகாரி 1

ஒரு மனிதர் தமக்கு முக்கியமில்லாத ஒன்றை தவிர்ப்பதாவது அவரது அழகான இஸ்லாமிய பண்புகளில் அடங்கும்.

நூல் : திர்மிதி 2239

யார் என் மீது வேண்டுமென்றே பொய் சொல்வாரோ அவர் தன் தங்குமிடத்தை நரகமாக்கிக் கொள்ளட்டும்.

நூல் : புகாரி 110

நபி(ஸல்) அவர்களின் சொல் சார்ந்த சுன்னாக்கள்தான் ஹதீஸ் கிதாபுகளில் அதிகம் இடம் பெற்றிருப்பதை நாம் பார்க்கமுடியும்.

**சுன்னாவை ஆதாரமாக்குதலும் நடைமுறைப்படுத்துதலும்**

இஸ்லாமிய ஆதாரங்களில் குர்ஆனைப் போன்று சுன்னாவும் ஒரு ஆதாரம்தான் என்று முஸ்லிம்களிடத்தில் ஒன்றுபட்ட கருத்து இருக்கிறது. வரிசைகிரகமாக சொல்லும் போதுதான் முதலில் குர்ஆனை சொல்வார்கள். பிறகு சுன்னாவை சொல்வார்கள். அதனால் முதல் ஆதாரம் குர்ஆன். குர்ஆனில் இல்லாவிட்டால் சுன்னா என்று பொருளல்ல. குர்ஆன் அடிப்படையாகும். சுன்னா அதன் கிளையாகும். குர்ஆன் அதன் வசனங்களாலும் எழுத்துக்களாலும் உறுதி செய்யப்பட்டதாகும். சுன்னா என்பது பொதுவாக உறுதி செய்யப்பட்டதாகும். ஆனால் வார்த்தைகளாலும் எழுத்துக்களாலும் உறுதி செய்யப்பட்டதல்ல.

மேலும் சுன்னா ஆதாரம்தான் என்பதற்கு குர்ஆனுடைய தேவையிருக்கிறது. ஆனால் குர்ஆன் என்பதற்கு எந்த ஆதாரமும் தேவையில்லை.

குர்ஆன் மனிதர்களுக்கு வழிகாட்டுவது. இவ்வுலகத்தில் அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்பதை அறிவிக்கும். சுன்னா குர்ஆனில் சொல்லப்பட்ட இவ்விசயங்களை விளக்குவதாக அமையும்.

அல்லாஹ் தஆலா குர்ஆனில் குறிப்பிடுகிறான்.

மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தப் போதனையை உமக்கு அருளினோம்.

அல்குர்ஆன் 16 : 44

இதன் காரணமாகத்தான் சுன்னா இஸ்லாமிய ஷரியத்தில் மிக முக்கியமானதாக இருக்கிறது. நபித்தோழர்கள் காலத்திருந்து காலங்காலமாக முஸ்லிம்களும் சுன்னாவை முக்கியமானதாக கருதுகிறார்கள். முஸ்லிம்களில் யாரும் சுன்னாவை மறுக்கவோ அதை விடவோ இல்லை.

**இதன் காரணமாகத்தான் சுன்னா இஸ்லாமிய ஷரியத்தில் மிக முக்கியமானதாக இருக்கிறது. நபித்தோழர்கள் காலத்திருந்து காலங்காலமாக முஸ்லிம்களும் சுன்னாவை முக்கியமானதாக கருதுகிறார்கள். முஸ்லிம்களில் யாரும் சுன்னாவை மறுக்கவோ அதை விடவோ இல்லை.**

**சுன்னாவிற்கான ஆதாரங்கள்.**

இஸ்லாமிய ஷரீயத்தில் சுன்னா ஒரு மார்க்க ஆதாரம்தான். குர்ஆனை வைத்து சட்டங்கள் வகுக்கப்படுவதை போன்று சுன்னாவை வைத்தும் சட்டங்கள் வகுக்கப்படும். மேலும் எப்படி குர்ஆன் ஒன்றை ஹலால், ஹராம் என்று தீர்மானிப்பதற்கு இடம் உண்டோ அது போன்று சுன்னாவிற்கும் இடம் உண்டு. மேற்கூறப்பட்ட இவ்விஷயங்களுக்கு குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் இஜ்மாவிலும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

**குர்ஆனில் இடம் பெற்ற ஆதாரங்கள் :**

"நீங்கள் அல்லாஹ்வை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள்! அல்லாஹ் உங்களை விரும்புவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்" என்று கூறுவீராக! (அல்குர்ஆன் 3 : 31)

(முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல், முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

அல் குர்ஆன் 4 : 65

(முஹம்மதே!) உமக்கு முன் ஆண்களையே தூதர்களாக அனுப்பினோம். அவர்களுக்குத் தெளிவான சான்றுகளுடனும், ஏடுகளுடனும் நமது தூதுச் செய்தியை அறிவித்தோம். நீங்கள் அறியாதிருந்தால் அறிவுடையோரிடம் கேளுங்கள்! மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தப் போதனையை உமக்கு அருளினோம்.

அல்குர்ஆன் 16 : 44

இத்தூதருக்கு (முஹம்மதுக்கு) கட்டுப் பட்டவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டார். யாரேனும் புறக்கணித்தால்

உம்மை அவர் களின் காப்பாளராக நாம் அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 4 : 80)

இத்தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ அதை வாங்கிக் கொள்ளுங்கள்! எதை விட்டும் உங்களைத் தடுத்தாரோ (அதிலிருந்து) விலகிக் கொள்ளுங்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன்.

(அல்குர்ஆன் 59 : 7)

இந்த ஆயத்துக்கள் அனைத்தும் நபி (ஸல்) அவர்களை ஒவ்வொரு விஷயத்திலும் பின்பற்ற வேண்டும். எல்லா நேரத்திலும் பின்பற்ற வேண்டும். அவர்கள் வாழும் காலத்திலும் மரணத்திற்கு பின்னால் உள்ள காலத்திலும் அவர்களை பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஏனென்றால் இங்கு குறிப்பிடப்பட்ட எந்த வசனங்களும் குறிப்பிட்ட காலத்திற்குத்தான் சுன்னாவை பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடவில்லை.

**ஹதீஸ்களிலுள்ள ஆதாரங்கள்.**

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "என் சமுதாயத்தார் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள்; ஏற்க மறுத்தவரைத் தவிர" என்று கூறினார்கள். மக்கள், "அல்லாஹ்வின் தூதரே! ஏற்க மறுத்தவர் யார்?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "எனக்குக் கீழ்ப்படிந்தவர் சொர்க்கம் புகுவார்; எனக்கு மாறுசெய்தவர் (சத்தியத்தை) ஏற்க மறுத்தவர் ஆவார்" என்று பதிலளித்தார்கள். நூல் : புகாரி 7280

இந்த செய்தியில் யார் நபியவர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களின் பாதையையும் வழிமுறையையும் பின்பற்றி நடக்கிறாரோ அவர் அவரின் அமல்களைக் கொண்டு சுவர்க்கம் புகுவார். யார் நபியவர்களை பின்பற்றாமலும் அவர்களின் வழிமுறையையும் பின்பற்றாமலும் இருக்கிறாரோ அவரின் தீய காரியத்தினால் நரகம் புகுவார். எனவே நபியவர்களை பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயமாகிறது.

இர்பாள் பின் சாரியா(ரழி) அவர்கள் கூறியதாவது : அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் ஒரு அதிகாலை தொழுகைக்குப்பின் எங்களிடையே சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். அதைக் கேட்டு எங்கள் கண்கள் கண்ணீரைச் சிந்தின. எங்கள் உள்ளங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கின. அப்போது ஒரு மனிதர் இது விடைபெற்றுச் செல்லும் ஒருவர் கூறும் அறிவுரை போன்றுள்ளது. அல்லாஹ்வின் தூதரே தாங்கள் எங்களிடம் இறுதி விருப்பமாக என்ன சொல்லப் போகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் நீங்கள் இறைவனை அஞ்சுமாறும் கறுப்பு நிற அடிமை உங்களுக்கு ஆட்சியாளராக ஆக்கப்பட்டாலும் அவருடைய சொல்லை செவியேற்று அதற்கு கீழ்படிந்து நடக்குமாறும் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். ஏனெனில் உங்களில் எனக்குப் பின்னால் வாழ்பவர்கள் அதிகமான கருத்துவேறுபாடுகளை காண்பர். மார்க்கத்தில் புதுமையாக புகுத்தப்படும் புதுமைகளிருந்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் மார்க்கத்தில் புதிதாக உண்டாக்கப்படுபவை யாவும் வழிதவறச் செய்யக்கூடியவையாகும். மார்க்க அடிப்படையற்ற இவ்விஷயங்களை சந்திக்கும் உங்களில் ஒருவர் எனது வழிமுறையையும் நல்வழிகாட்டப்பட்ட நேர்வழி பெற்ற சஹாபாக்களின் வழிமுறையையும் கடைவாய் பற்களால் இறுகப் பற்றிகொள்ளுங்கள். என்று கூறினார்கள். திர்மிதி 2597

**இஜ்மாவிலுள்ள ஆதாரங்கள்:**

நபித்தோழர்கள் அனைவரும் நபியவர்களின் சுன்னாவை அவர்களின் வாழும் காலத்திலும் அவர்கள் மரணித்த பிறகும் பின்பற்றுவது கடமை என்ற விஷயத்தில் ஒன்றுபட்டுள்ளார்கள். அதற்கான ஆதாரங்களை இப்போது பார்ப்போம்.

ஒரு பாட்டி அபூபக்கர்(ரழி) அவர்களிடம் வந்து தன்னுடைய மகளின் மகனிலிருந்து வரும் சொத்தை கேட்டாள். அதற்கு அபூபக்கர்(ரழி) அவர்கள் குர்ஆனிலும் நான் அறிந்த வரையில் சுன்னாவிலும் உனக்கான சொத்து விபரத்தை காணவில்லை என்று கூறி மக்களிடம் இது தொடர்பாக கேட்டார்கள். அங்கிருந்த முகீரா பின் சுஃபா(ரழி) அவர்கள் நான் நபியவர்களின் சபையில் இருந்திருக்கிறேன். பாட்டிக்கு நபியவர்கள் ஆறில் ஒரு பகுதியை கொடுத்தார்கள் என்று சொன்னார். அப்போது அபூபக்கர்(ரழி) அவர்கள் உன்னோடு (இந்த செய்திக்கு சாட்சியாக) வேறு நபர்கள் இருக்கிறார்களா? என்று கேட்டார்கள். அப்போது முஹம்மத் பின் மஸ்லமா அல்அன்சாரி(ரழி) அவர்கள் முகீரா சொல்வதைப் போன்று நானும் நபியவர்களிடத்தில் கேட்டிருக்கிறேன் என்று சொன்னார். அபூபக்கர்(ரழி) அவர்கள் அந்த செய்தியின் அடிப்படையில் பாட்டிக்கு ஆறில் ஒரு பங்கு என்று தீர்ப்பளித்தார்கள்.

நூல் : முஅத்தா மாலிக் *1098*

நாம் ஸலபுகளின் செய்திகளையும் பின்னோர்களின் செய்திகளையும் ஆராய்ந்து பார்த்தால் நான்கு கலிபாக்கள் முதல் இன்று வரை வந்த எந்த இமாம்களும் அறிஞர்களும் சுன்னாவை மறுப்பவர்களாக நாம் காணவில்லை. இதற்கு மாற்றமாகத்தான் அவர்களின் செய்திகளிருந்து சுன்னாவை ஏற்று மார்க்க ஆதாரமாக கருதியிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். மேலும் சுன்னாவிற்கு மாற்றமாக செயல்படுவதை விட்டும் மக்களை எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். சுன்னாவிற்கு எதிராக தன்னுடைய கருத்து முரண்பட்டால் தன்னுடைய கருத்துக்களை விட்டுவிடும்படி மக்களை பணித்திருக்கிறார்கள்.

**நபித்தோழர்கள் அனைவரும் நபியவர்களின் சுன்னாவை அவர்களின் வாழும் காலத்திலும் அவர்கள் மரணித்த பிறகும் பின்பற்றுவது கடமை என்ற விஷயத்தில் ஒன்றுபட்டுள்ளார்கள்.**

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஹதீஸ் ஆதாரப் பூர்வமானதாக இருந்தால் அதுவே என்னுடைய (மத்ஹப்) கருத்து. என்னுடைய கருத்தை சுன்னாவிற்கு முரணாக கண்டால் அதை சுவற்றில் எறிந்துவிடுங்கள்.

நூல் : ஸியரு அஃலாமின் நுபலா

பாகம் *10* பக்கம் *36*

மேலும் இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் எவருக்கு சுன்னா தெளிவாகிவிட்டதோ அவருக்கு யாருடைய சொல்லுக்காகவும் நபியவர்களின் சொல்லை விடுவது கூடாது.

நூல் : இஃலாமுல் முவக்கியீன்

பாகம் *2* பக்கம் *302*

இது போன்று அனைத்து இமாம்களும் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இந்த சுன்னாவை பதிவு செய்து உலகம் முழுவதிற்கும் கொண்டு சென்றுள்ளார்கள்.⦿




ஒரு மனிதன் மரணித்து மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டதும் அங்கு உனது இறைவன் யார்? உனது மார்க்கம் என்ன? உனது தூதர் யார்? என்று மூன்று கேள்விகள் கேட்கப்படும் என நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.

இக்கேள்விகளுக்கான விடைகளை அறிவதே மூன்று அடிப்படைகள் என்று குறிப்பிட்டு அவற்றை பற்றிய விவரங்களையும் மார்க்கத்தின் அடிப்படைகள் குறித்த விளக்கங்களையும் சுருக்கமாக இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இஸ்லாமிய உலகில் தற்காலத்தில் மாமேதையாக திகழும் ஷைக் ஸாலிஹ் அல்ஃபவ்ஸான் அவர்கள் இந்நூலுக்கு எழுதியுள்ள விளக்கவுரையை தழுவி மவ்லவி அன்சார் ஹுசைன் ஃபிர்தவ்சி அவர்கள் மூன்று அடிப்படைகள் மூலமும் விளக்கமும் எனும் இந்நூலை எழுதியுள்ளார்கள்.


இந்த விளக்கவுரையில் மேற்கண்ட மூன்று அடிப்படைகளின் விளக்கம் மட்டுமின்றி ஈமான், இஸ்லாம், இஹ்ஸான் உள்ளிட்ட இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள் எல்லாம் எளிய முறையில் விளக்கப்பட்டிருக்கிறது.

மார்க்கத்தின் கொள்கைகளை கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொடுக்கவும் உதவக்கூடிய நூல்.

வெளியீடு: நஷ்ருல் இஸ்லாம் பதிப்பகம், சென்னை.

தொடர்புக்கு: 99529 08991.

## நூலகம்




**திருக்குர்ஆன் வசனங்களும் மாற வேண்டிய உள்ளங்களும்**

திருக்குர்ஆன் வசனங்களை படிப்பது, கேட்பதுடன் மட்டும் நின்று விடாமல் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் நூல்.

கடந்த 2020 ம் வருடம் ரமளானில் மௌலவி இக்பால் ஃபிர்தவ்சி அவர்கள் தொலைக்காட்சியில் தொடராக ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்நூல்.

திருக்குர்ஆனில் பேசப்படும் பல முக்கிய விசயங்கள் குறித்து அலசுகிறது இந்த நூல். உள்ளங்களை பரிசுத்தப்படுத்தவும் பண்படுத்தவும் வேண்டும் என்பது குர்ஆனின் போதனை. இதைப்பற்றி அல்குர்ஆன் கூறும் உள்ளங்கள் என்ற தலைப்பில் அதிகமான பக்கங்களில் விரிவாக பேசுகிறது இந்நூல்.

சோதனை எனும் பித்னா, குர்ஆன் வெறுக்கக்கூடிய மற்றும் நேசிக்கக்கூடிய மக்கள், சஹாபாக்களின் வாழ்வில் குர்ஆன், குர்ஆன் ஏற்படுத்திய தாக்கம் உள்ளிட்ட பல தலைப்புக்களின் மூலம் படிப்போரை இறைவேதத்துடன் இணைக்கிறது இந்தப் புத்தகம்.

அனைவரும் படித்து பயன்பெற வேண்டும். அன்பளிப்பு செய்ய உகந்த நூல்.

வெளியீடு: நஷ்ருல் இஸ்லாம் பதிப்பகம், சென்னை.

தொடர்புக்கு: 99529 08991.



### இஸ்லாமிய அழைப்பாளர்களிடமும் நிர்வாகிகளிடமும் இருக்க வேண்டிய பண்புகள்:-

1.உளத்தூய்மை
2. இறையச்சம்
3. கடமை தவறாமை
4. கல்வியறிவைத் தேடுதல்
5. சொன்னபடி நடத்தல்
6. திட்டமிடல்
7.நேரம் தவறாமை
8. பொறுமை
9. இஸ்லாமிய நடையுடை பேணுதல்
10.மென்மை
11.உண்மை பேசுதல்
12.விடா முயற்சி
13. சுயக்கட்டுப்பாடு
14.பணிவு, அன்பு
15.நேர்மை
16. நீதியை நிலைநாட்டுதல்
17.பெருந்தன்மை
18.பொறுப்புணர்ச்சி
19.அமானிதம் பேணுதல்
20. நன்றி பேணுதல்
21. விதிமுறைகளைப் பேணுதல்
22. ஒருவருக்கொருவர் நல்லவற்றில் உதவி செய்தல்
23.பிறரின் உரிமைகளைப் பேணுதல்
24. பிறரைக் கண்ணியப் படுத்துதல்
25. ஒரே ஜமாஅத்தாக இருந்து தலைமைக்குக் கட்டுப்படுகல்

### இஸ்லாமிய அழைப்பாளர்களிடமும் நிர்வாகிகளிடமும் இருக்கக் கூடாத பண்புகள்:

1. கண்முடிப் பின்பற்றுதல்
2.சோம்பல், பொடுபோக்கு, அலட்சியம்
3. கோழைத்தனம், தாழ்வுமனப்பான்மை
4. பெருமை, அகம்பாவம்
5. பொறாமை, காழ்ப்புணர்ச்சி,
6. வீண் பிடிவாதம்
7.வீண் சந்தேகம்
8.வீண் விரயம்
9.வீணான விமர்சனங்கள்
10. பேராசை
11.கஞ்சத்தனம்
12. பிறர் கலாசாரத்தை, பின்பற்றுதல்
13.பொறுப்பைத் தட்டிக் கழித்தல்
14. தடுக்கப்பட்ட காரியங்களைச் செய்தல்
15. கோபம், குரோதம் முகஸ்துதி தற்பெறுமை புகழ் விரும்புதல்
16. பிறரைக் கேவலப்படுத்துதல்
17.தீர விசாரிக்காமல் கேட்டதையெல்லாம் நம்புதல்
18.சதித்திட்டம்
19.சுயநலம்
20. கேலி, கிண்டல், கெட்ட வார்த்தைகள்
21. குறுக்கீடுகள்
22.பொறுப்பில்லாதவர்களிடம் முறையிடுதல்
22.ஏற்ற தாழ்வுகற்பித்தல்
24.மொழிவாதம், பிராந்திய வாதம்
25. புறம் பேசுதல் இட்டுகட்டுதல்

# இஸ்லாமிய எழுச்சி

## JAQH அமைப்பின் அழைப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களின் அழைப்புப் பணி மற்றும் களப் பணியின் தொகுப்பு

**திண்டுக்கல் மாவட்டம்.**

**பழனி நகர ஜம்யிய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் ஜமாஅத்தின் சார்பாக**

**கொரானா தடுப்பு நடவடிக்கை!**

கடந்த **15** ஏப்ரல் **2021** முதல் அதைத்தொடர்ந்து மே மாதமும் கடந்த ஒரு மாதமாக பாலசமுத்திரம், பழனி உழவர்சந்தை,பேருந்து நிலையம், காந்தி மார்கெட் மற்றும் நகரில் உள்ள வீடுகளுக்கும் சென்று கபசுர குடிநீர் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் தஃவாப்பணியும் செய்யப்பட்டது இந்நிகழ்ச்சியில் பழனி அரசு சித்த மருத்துவர் திரு.மகேந்திரன் அவர்களும்,பழனி நகர் போக்குவரத்து காவல் ஆய்வாளர்,திரு தக்ஷினா மூர்த்தி, மற்றும் போக்குவரத்து காவல் சிறப்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்களும் கலந்துகொண்டு கபசுர குடிநீரை பொதுமக்களுக்கு வழங்கி கொரானா பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

இரவு தொழுகைக்கு பிறகு JAQH மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளியில் ரமளான் இரவு சிறப்பு பயான் நிகழ்ச்சி நடைபெற்றது அதில் மௌலவி தாஹா புகாரி (இஸ்லாமிய அழைப்பாளர் மதுரை) அவர்கள் தக்வா என்கின்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். செல்வமும் சோதனையும் எனும் தலைப்பிலும் மறுநாள் வறுமையும் சோதனையே என்கின்ற தலைப்பில் உரையாற்றினார்கள் சகோதரர் கி நவாப் ஷெரிப் (JAQH அழைப்பாளர் பழனி) உணரப்படாத வட்டியின் வகைகளும் அவற்றின் விபரீதங்களும் என்கின்ற தலைப்பில் உரையாற்றினார்கள். மௌலவி யூனுஸ் ஃபிர்தௌஸி (JAQH அழைப்பாளர் குன்னூர்) தலைப்பு: நன்மையை ஏவி தீமையை தடுத்தல் என்ற தலைப்பிலும் சகோதரர் சம்சுதீன் (JAQH அழைப்பாளர், மதுரை) தலைப்பு: நல்ல செயல்களும் தீய செயல்களும் என்ற தலைப்பிலும்உரை நிகழ்த்தினார்கள்.

**திருச்சி மாவட்டம்**

மௌலவி பக்ருதீன் ஃபிர்தௌஸி அவர்கள் JAQH தென்னூர் ஜும்ஆ மர்கஸ், மூலக்கொல்லை தெருவில் நபிமார்கள் வரலாறு என்ற தலைப்பில் ரமலான் இரவு தொழுகைக்குப் பிறகு உரை நிகழ்த்தினார்கள்.

**கோவை மாவட்டம்**

**மஸ்ஜிதுத் தஃக்வா- ரமலான் சிறப்பு நிகழ்ச்சி**

மௌலவி அப்துல் மஜீத் மஹ்ளரி அவர்கள் (முதல்வர் ஆயிஷா சித்தீக்கா பெண்கள் கல்லூரி காயல்பட்டினம்) பல தலைப்புகளிலும், சகோதரர் சிக்கந்தர் அவர்கள் நபிகளாரின் நேசம் மறுமையே இலக்கு என்ற தலைப்பிலும் ரமளான் இரவு தொடர் சிறப்பு சொற்பொழிவு நடத்தினார்கள்.

**மஸ்ஜிதுல் ஹக்**

*மௌலவி ஃபக்ருதீன் இம்தாதி உலக அழிவும், மறுமை விசாரணையும் என்ற தலைப் பிலும் ரமளான் இரவு தொடர் சிறப்பு சொற்பொழிவு நடத்தினார்கள்.*

**சேலம் மாவட்டம்**

*ஜம்இய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் (JAQH) சேலம் மாவட்ட ஜகாத் கம்மிட்டி சார்பாக ஏற்கனவே முடிவு செய்ததின் அடிப்படையில் **16** எழை குடும்பங்களுக்கு மாதந் தோறும் ரூபாய் **1000** திட்டம் இன்று துவங்க பட்டது.அதன் முதல் கட்டமாக சேலம் கோட்டை பகுதி மற்றும் கரீம் நகர், பச்சபட்டி, அம்மாபேட்டை போன்ற பகுதிகளில் இருக்கின்ற குடும்பங்களுக்கு இன்று வழங்கப்பட்டது.*

**சென்னை மாவட்டம்**

JAQH *மாநில தலைமையகத்தில் மௌலவி ரஹ்மத்துல்லாஹ் பிர்தௌஸி அல்லாஹ்வின் விருப்பத்திற்கும் வெறுப்பிற்கும் உரியவர்கள்!!! என்ற தலைப்பில் ரமளான் இரவு தொடர் சிறப்பு சொற்பொழிவு நடத்தினார்கள்.*

**தென்காசி மாவட்டம்**

*ரமலான் சிறப்பு நேரலை நிகழ்ச்சி...!*

*தென்காசி மீடியா என்ற முகநூல் பக்கத்தில் பத்ருப்போர் பாடங்களும் படிப்பினைகளையும் என்ற தலைப்பில் மௌலவி ரஹ்மத்துல்லாஹ் ஃபிர்தௌஸி **03.04.20121** அன்றும் ரமலானில் நாம் கற்றது என்ன? என்ற தலைப்பில் மௌலவிஅன்ஸார் ஹுஸைன் ஃபிர்தௌஸி **04.05.20121** அன்றும் மௌலவி தாஹா ஃபைஸி ஜிப்ரீல்(அலை) நபியவர்களிடம் வந்ததருணங்கள் என்ற தலைப்பிலும் **05.05.2021** அன்றும் ஆட்சியாளர்களின் பண்புகள் என்ற தலைப்பிலும் **7.5.2021** அன்றும் உரை நிகழ்த்தினார்கள்.*

**இணையதள வழி மார்க்க பிரச்சாரம்**

*ஜம்இய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் அமைப்பின் அதிகாரபூர்வ முகநூல் பக்கமான* JAQH TAMILNADU PAGE *ல் **13.05.2021** வியாழன் காலை **11** மணிக்கு ரமளான் பெருநாளும் அல்அக்ஸாவும் என்ற தலைப்பில் மௌலவி ரஹ்மத்துல்லாஹ் ஃபிர்தவ்ஸி அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். இதில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கேட்டு பயன் அடைந்தனர்.*

*ஜம்இய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் அமைப்பின் அதிகாரபூர்வ முகநூல் பக்கமான* JAQH TAMILNADU *ல் முச்சுவிட திணறும் இந்தியா ஆக்ஸிஜனும் அல்லாஹ்வின் அருட்கொடையும் என்ற தலைப்பில் **26.04.21** அன்று மௌலவி ரஹ்மத்துல்லாஹ் ஃபிர்தவ்ஸி உரை நிகழ்த்தினார்கள் இதில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கேட்டு பயன் அடைந்தனர்.*

JAQH *சென்னை மாவட்டம் நடத்தும் ஈத் சிறப்பு ஆன்லைன் நிகழ்ச்சி*

*ஜம்இய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் சென்னை மாவட்டம் சார்பில் **11.05.2021** (செவ்வாய்கிழமை) இரவு **09:15** மணி முதல் **09.45** வரை மௌலவி அன்ஸர் ஹுசைன் ஃபிர்தெவ்ஸி அவர்கள் ஈத் சிறப்பு ஆன்லைன் நிகழ்ச்சி* JAQH *சென்னை முகநூல் பக்கம் வாயிலாக நடத்தினார்கள். இதில் இதில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கேட்டு பயன் அடைந்தனர்.*◉

# அன்புள்ள கொள்கை சகோதரர்களுக்கு...

எல்லாம் வல்ல ஏக இறைவன் நம் எல்லோரையும் எல்லாவிதமான நோய்களிலிருந்தும் பாதுகாத்து மனநிம்மதியை வழங்குவானாக!

நாம் வாழும் இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பதட்டத்திலும், பீதியிலும் வாழ்ந்து கொண்டிருப்பதை பரவலாகப் பார்க்க முடிகிறது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ எந்த நேரத்தில் வைரஸ் என்னைத் தாக்குமோ, மரணம் எப்படி வருமோ என்ற மரண பீதியில் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். காரணம் அன்றாடம் ஆயிரக் கணக்கான மனிதர்கள் மடிந்து கொண்டிருக்கிக்கிறார்கள். இறந்து போனவர்களுடைய உடல்களை வாங்கிச் செல்வதற்கும் இறுதி சடங்குகள் செய்வதற்கும் யாரும் இல்லாததால் மனித உடல்கள் ஆறுகளில் தூக்கி எறியப்பட்ட காட்சிகளை வட மாநிலத்தவர்களிடத்தில் காண முடிகிறது. மனித உடல்கள் நாயிகளுக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன. நாளுக்கு நாள் நோயினால் பாதிக்கப்பட்டர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. மருத்துவமனைகளில் தங்க வைத்து சிகிச்சை கொடுப்பதற்கான சரியான இடவசதி இல்லாததால் நோயாளிகள் வரிசையில் அணிவகுத்து நிற்கின்றனர். அப்படியே மருத்துவமனைகளில் இடம் கிடைத்தாலும் சிகிச்சைக்காக பல இலட்சம் ரூபாய்கள் தேவைப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியில் வாழக்கூடியவர்களின் நிலை என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இப்படிப்பட்ட பரிதாபமான நிலை நாடெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. இதைப் பார்த்து அனைத்து தரப்பினரும் தங்கள் கவலையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். நோய் பரவலைத் தவிர்ப்பதற்காக சில வழிமுறைகளை ஒட்டுமொத்த மருத்துவர்களும் மக்களுக்கு வலியுறுத்தி வருகின்றனர். முகக் கவசம் அணிவதும், மனிதர்கள் ஒருவருக்கொருவர் நெருங்காமல் இருப்பதும் தான் நோய் பரவலைத் தடுப்பதற்கான வழி என கண்டறிந்து அதைக் கடைபிடிக்குமாறு கூறி வருகின்றனர். இதை எல்லோரும் கடைப்பிடிப்பது கடமையாக இருக்கிறது. இவற்றைப் பின்பற்றுவதன் மூலம் நோய் பரவலைத் தடுப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இதற்கெல்லாம் மேலாக மனித சமூகம் இந்த நெருக்கடியான நேரத்தில்கூட இப்படிப்பட்ட சோதனை யார் மூலம் ஏற்பட்டிருக்கிறது? ஒட்டுமொத்த மனித குலத்திற்கே சவாலாக இருக்கின்ற கண்ணிற்குத் தெரியாத ராணுவத்தை உலகெங்கும் ஒரே நேரத்தில் பரவச் செய்தது யார்? இதற்குப் பின்னால் இருந்து இயக்கிக் கொண்டிருக்கின்ற மாபெரும் ஆற்றல் மிக்கவன் யார்? அவன் எங்கே இருக்கிறான்? என்று சிந்தித்து, அவனை அறிந்து அவனிடத்தில் முறையிட்டு, இந்த ராணுவத்தை விரட்டியடிக்குமாறு வேண்டுவதுதான் அறிவுடையோர் மீது கடமையாகும்.

உங்கள் நலம் நாடும்
**S.கமாலுத்தீன் மதனி**

**Owned and Published by S.Kamaludeen from No.61/26, Ayyasamy Street, Pudupet, Chennai - 600 002. Printed by Iqbal khan at Graphics Park, No.78, Big Street, Chennai - 600005. Editor: S.Kamaludeen.**



பிரஸ்டன் பன்னாட்டு கல்லூரி
10, கவிஞர் பாரதிதாசன் சாலை, ஆல்வார்ப்பேட்டை, சென்னை-18.
PRESTON
INTERNATIONAL COLLEGE
2021 - 2022
கல்வியாண்டிற்கான
சேர்க்கை
நடைபெறுகிறது!!!
B.A. இஸ்லாமியக் கல்வி
ஆங்கிலம் & தமிழ் - வழிக்கல்வி
(தமிழ்நாடு திறந்தநிலை
பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது)
1
முறைசார்
• நேரடி பயிற்சி
• இ-கற்றல் மையம்
• கல்வி நிகழ்வுகள்
• கூடுதல் பாடங்கள்
• தாவா பயிற்சி
• பணிவாய்ப்பு வழிகாட்டல்
• ஆய்வரங்கு
• கல்விச் சுற்றுலா
2
புதிய !!!
நிகழ்நிலை
• நேரடி பயிற்சி
• இ-கற்றல் மையம்
• கல்வி நிகழ்வுகள்
• அவ்வப்போது மதிப்பிடுதல்
• சான்றளிப்பு
(சென்னைக்கு வெளியே வசிக்கும் மாணவர்களுக்கு)
3
தொலைநிலை
• பல்கலைக்கழக உதவி
• பாட புத்தகங்கள்
• அவ்வப்போது மதிப்பிடுதல்
• இ-கற்றல் மையம்
• ஆய்வரங்கு
தகுதி: +2
மேலும் விவரங்களுக்கு:
+91 99416 78784
ஆன்லைனில் விண்ணப்பிக்க:
WWW.PRESTONCHENNAI.AC.IN
இந்த ஆண்டு முதல் (2021-2022)
முதுகலைப்பட்டம் (MA) ஆன்லைன் வகுப்புகள் தமிழ் மொழியில்
தகுதிகள் : இளங்கலை பட்டம் மற்றும் அரபியில் புலமை

Aljannath Postal Register No. TN/ARD/26/2021-2023

**Date of Published:
1st of Every Month**

Regd with Registrar of News Paper for India Under No. T.N.TAM-2000/600

Licensed to post without prepayment WPP No. TN/PMG (CCR) WPP 493/2021-2023

Posted at Egmore RMS/1, Patrika Channal, Chennai-8. Posted between 1 - 4 (June 2021)

**If Undeliver, Please Return to : ALJANNATH , 26, Ayyasamy Street, Pudupet, Chennai - 600002.**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# معهد المنار لتحفيظ القرآن الكريم

# அல்மனார் குர்ஆன் மனன மையம் ( Runby JAQH )

மஸ்ஜிதுல் முஸ்லிமீன் வளாகம், 26, வின்சென்ட் ரோடு, கோட்டை, கோயமுத்தூர் - 01.

**அல்லாஹ்வின் கிருபையால் 2015 ஆம் ஆண்டு முதல் கோவையில் சிறப்பாக செயல்பட்டு வரும் உணவு, ஹாஸ்டல் வசதியுடன் கூடிய குர்ஆன் மனனமையம்**

இதுவரை **17 மாணவர்கள் ஹாஃபிழ் பட்டம்** பெற்றுள்ளனர்

**புதிய சேர்க்கை நடைபெறுகிறது**

**மாணவர் தகுதிகள்**

1. வயது வரம்பு 8 முதல் 11 வரை
2. குர்ஆனை பார்த்து சரளமாக ஓத தெரிந்திருக்க வேண்டும்

**சிறப்பம்சங்கள்**

* நான்கு வருட கல்வித்திட்டம்.
* அனுபவமிக்க ஆசிரியர்கள்.
* தஜ்வீது, கிராஅத் பயிற்சி.
* திக்ர், துஆ, தொழுகை பயிற்சி வகுப்புகள்.
* இஸ்லாமிய கொள்கை (அகீதா) வகுப்புகள்.
* ஆரோக்கியமான உணவு மற்றும் மருத்துவ வசதி.
* வாராந்திர உடற்பயிற்சி வகுப்பு.
* மாணவர்களின் விளையாட்டுக்கான நேரம்.
* இறையச்சத்தையும், இஸ்லாமிய அறிவையும் பெறும் வாய்ப்பு.
* பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலுடன் கட்டில், மெத்தை வசதியுடன் கூடிய தங்கும் விடுதி.
* விசாலமான, காற்றோட்டமுள்ள வகுப்பறைகள்.
* இறுதியாண்டில் பள்ளிப்படிப்பை தொடரும் வசதி.
* மாநில அளவில் நடைபெறும் கிராஅத் போட்டிகளில் மதரஸா மாணவர்கள் பங்கேற்று தேர்ச்சி பெற பயிற்சிகள்.








இப்பணிகள் அனைத்தும் அல்லாஹ்வின் கிருபையால் நல்லுள்ளம் கொண்ட சான்றோர்களின் உதவிகளால் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.அல்லாஹ்விடத்தில் நிரந்தர நன்மைகளை பெற்றுத்தரக்கூடிய இப்பணிகள் மேலும் சிறப்பாகவும், தங்கு தடையின்றியும் தொடர அல்லாஹ்வின் பாதையில் உங்கள் நன்கொடைகளை இம்மதரஸா வளர்ச்சிக்காக தந்துதவுங்கள்.

**Run by JAQH : JAMIYYATHU AHLIL QURAAN VAL HADHEES COIMBATORE DISTRICT**

**Contact : 93448 76476, 94437 58951, 0422 - 4204030**